P. R. C. Series 30.

சரோஜினி.

அல்லது

நாகரீக வேட்கை.

ஒரு நூதன துப்பறியும் நாவல்.

"அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி",
"ரகுநாத சர்மா", "வீரசுந்தரம்", "சிதம்பர ரகசியம்,"
"மிஸ் மோஹனா," "இருளரசன்."
முதலிய பல நாவல்களின் ஆசிரியர்
தென்பாதி *T. S.* கனகசபை
அவர்களால் எழுதப்பட்டது.

பிரசுரிப்பது:
ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

காப்பிரைட் ரிஜிஸ்டர்] 1934 [விலை அணா 5

சரோஜினி

அல்லது

நாகரீக வேட்கை.

அத்தியாயம்—1.

நாகரீக நங்கை—சந்தேகத்தின்மேல் சந்தேகம்

நவநாகரீகத்திற் குறைவிடமான சென்னைமா நகரில் அடையாற்றங் கரையிலுள்ள சுதந்திர பவனம் என்ற உன்னத மாளிகையின் எதிரில் பிரயாணத்திற்குச் சித்தமாக ஒரு பேபி ஆஸ்டின் (Baby Austin) நின்று கொண்டிருந்தது. சரோஜினி அதில் ஏறி உட்கார்ந்தாள். இவ்வாறு ஒரு யுவதி மோட்டார் வண்டியிலேறி உட்கார்ந்த காம்பீரத் தோற்றத்தை எதிரில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் மிகக் கூர்மையாகக் கவனித்துச் சற்று அருகாமையில் வந்து அப்பெண்மணியை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். அவன் மனதில் ஒருவகைக் கலக்கம் தோன்றியது. திடுக்கிட்டவன்போல் அப்படியே திகைத்து நின்றான்.

ஆனால் மறு நிமிஷத்தில் அத்திகைப்பு மாறிச் சிறிது திருப்தியும், சந்தேகமின்மையும் ஏற்படலாயின. அழகிற் சிறந்த அந்நாரியை மென்மேலும் உற்றுப் பார்த்த வண்ணமாகவே யிருந்தான். "சித்திரப்பாவையன்று. உருவெளித்

தோற்றமுமன்று. உண்மையில் உயிருள்ள ஒரு உருவமே" என்ற சந்தேகத்தை அவன் கண்கள் நிவர்த்தி செய்து கொண்டன போலும்.

தன்னை யாரோ கவனித்துப் பார்ப்பதை யறிந்து கொண்டு சரோஜினி ஜாடையாக நோக்கினாள். சரோஜினியின் கண்ணொளி அம்புபோல் பாய்ந்தது. அவளது கன்னங்கள் சிவந்தன. மார்பு படபடவெனத் துடித்தது. இன்னதென்றறிந்துகொள்ள முடியாத சங்கடமேற்படலாயிற்று. அனுவசியமாக ஒருவன் தன்னை இவ்வாறு திகைக்கப்பார்க்கின்றானே எனக்கோப மூள்வதாகவும் அவளுக்குத்தோன்றியது.

அப்படி அவளைக் கவனமாகப் பார்க்கும் மனிதன் யார்?

சரோஜினி அலட்சியமாக மோட்டார் வண்டியை இயங்கவைத்து சென்னையில் நாகரீகத்தில் மிகுந்த ஒரு சிற்றுண்டிச் சாலைக்கு வந்து, ஒரு சோபாவிலமர்ந்து, தன் கையில வைத்திருந்த இறகு விசிரியால் விசிரிக்கொண்டிருந்தாள். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் அவளது உடையலங்காரம் அதிக ஆடம்பரமா யிருந்ததுடன், எழிலுருவமும், நீல விழிகளும், சொர்ணமயமான சரீர காந்தியும், பொருந்திய பேரழகு அவ்வுடைக்குப் பொருத்தமானதாயிருந்தது.

இந்து தேசத்தில் நூதனமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் நவீன நாகரீகப்படி, பிரபுக்களும் சீமாட்டிகளும் கலந்து உறவாடும் காட்சியில் அமர்ந்திருக்க, சலவைக்கல் மேஜையின் மீது வெள்ளித் தட்டுகளில் கையினால் தொடாமல் சாப்பிடுவதற்கு வேண்டிய உபகரணங்களுடன் சிற்றுண்டி வகைகள் பரிமாறப்பட்டிருந்தன. இந்தியர் என்ற பெயருடன் இப்பாத கண்டத்தில் பிறந்த பிரபுக்களும், சீமாட்டிகளும் அயல்நாட்டு நாகரீக வேட்கையால் தங்கள் பிறப்புரிமையை எவ்வளவு தூரம் பறி கொடுத்திருக்கிறார்களென்பதை இவ்விடத்திலறிந்து கொள்ளலாம்.

மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்தஒரு கண்ணாடி

கிண்ணத்திலுள்ள குளிர்ந்த பானத்தை மெல்லிய காகிதக் குழாய் மூலமாக உருஞ்சி ருசி பார்த்துக்கொண்டு சரோஜினி ஒய்யாரமாக வீற்றிருக்கையில் தன் மாளிகையின் எதிரில் நின்று தன்னை உற்றுப் பார்த்த மனிதனுடைய ஞாபகம் அவள் மனதில் உதிக்க, அதனால் குழப்ப மடைந்தாள். அந்த ஞாபகத்தை மறப்பதற்காக கையிலிருந்த சமாசாரப்பத்திரிகையை எடுத்துப் படிக்க எத்தனித்தாள். படிப்பின் மீதும் அவள் சிந்தை செல்லவில்லை. நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். மறுபடியும் பத்திரிகையின் மீது கவனத்தைச் செலுத்தினாள்.

சமாசாரப் பத்திரிகையிலுள்ள அச்செழுத்துக்களுக்கும், அவள் கண்களுக்கும் இடையில் அம்மனிதனுடைய வசிகரமான முகம் தோன்றியது. மறுபடியும் சமாசாரப் பத்திரிகையில் தன் கவனத்தைச் செலுத்த முயற்சிக்கையில், சரோஜினிக் கருகாமையிலிருந்த மேஜைக் கெதிரில் ஒரு வாலிபனும், யுவதியும் வந்து உட்கார்ந்தார்கள். உடனே அவர்களுக்கு வேண்டிய சிற்றுண்டி வகைகள் கொண்டு வந்து வைக்கப்பட்டன. சிற்றுண்டி யருந்திக் கொண்டே அந்த யுவதி அவ்வாலிபனோடு பேச ஆரம்பிக்க, அவர்கள் சம்பாஷணையை சரோஜினி கவனிக்கலானாள்.

—வாசுதேவனை இன்று காலையில் கிரிக்கெட் பந்தயத்தில் பார்த்தேன்—என்றாள் அப்பெண்மணி.

—அவன் எந்த ஊரிலும் எவ்விடத்திலும் இருப்பான். அதைப்பற்றி நமக்கென்ன?—என்று அவ்வாலிபன் அலட்சியமாகப் பதிலுரைத்தான்.

அப்பெண் நகைத்தாள்.

—விளையாட்டிலும், வினோதத்திலும் தன் வாழ்நாளைக் கழிப்பதற்காகவே அவன் இப்பூமியில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றான் போலும். அவனது அபரிமிதமான செல்வத்தையும், வசிகரமான ரூபத்தையும் கண்டு எத்தனையோ சீமான் வீட்டுப் பெண்கள் அவனை மணப்பதற்கு எதிர் பார்த்துக் கொண்டிருக்கதும், அவன் பெண்களைக் கண்டாலே வெறுப்படைவது ஆச்சர்யமா யிருக்கின்றது.—

—கண்மணீ! நீ இந்த வெறுங் கதையை நம்புகின்றாயோ? உலகில் எந்த மனிதனும் பெண்களை விரும்பாமலிருக்க முடியாது. வாசுதேவன் தன் மனதிற் கிசைந்த காதலியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றான் போலும்—

—இதோ! இதோ! வாசுதேவன்—

என்று அவ்விளைஞன் அச்சமயம் ஓட்டலில் பிரவேசித்த ஒரு காம்பீரமான மனிதனைச் சுட்டிக் காட்டினான்.

இந்த சம்பாஷணையைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த சரோஜினி, பெண்களை வெறுக்கும் அம்மனிதன் யார்? என்று அறிந்து கொள்ளத் தூண்டப்பட்டு அவனைக் கவனிக்கலானாள்.

வாசுதேவனைக் கண்டவுடன் அவ்விட மிருந்தோரனை வருமே முகமலர்ந்து அவனைச் சந்தோஷமாக வரவேற்று வந்தனம் செய்தார்கள். வாசுதேவன் எற்கனவே அவ்விடம் சிற்றுண்டி யருந்திக் கொண்டிருந்த தன் நண்பர்கள் சிலருடன் கலந்து கொண்டான்.

தன் மாளிகைக் கெதிரில் நின்று தன்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தவனே வாசுதேவன் என்பது சரோஜினிக்குத் தெரிய வந்தது.

ஓ! இதுதான் அவனுடைய பெயரோ? வாசுதேவன்! நல்ல அழகான பெயராக இருக்கின்றது. பெண்களை வெறுக்கின்ற ஒரு அதிசய மனிதனுக்கு இத்தகைய அழகான பெயர் ஏன்?—என்று சரோஜினி தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அத்தியாயம்—2.

கடற்கரை சந்திப்பு—மனோ அமைதியின்மை.

சரோஜினி சிற்றுண்டிச் சாலையிலிருந்து புறப்பட்டாள். சிகப்பு நிறமுள்ள ஒரு மோட்டார் வண்டி அவள் ஏறிச் சென்ற மோட்டா

ரைப் பின்பற்றியது. கடைசியாக கடற்கரையிலுள்ள மீன் கண்காட்சி சாலைக்கெதிரில் தன் மோட்டாரை ஒரு புறமாக நிறுத்திவிட்டுக் கீழேயிறங்கி மெல்ல நடந்தாள். இவளைப் பின்பற்றி வந்த சிகப்பு நிறமுள்ள மோட்டாரில் வந்த மனிதன் சற்று தூரத்தில் அவளைப்பின் தொடர்ந்தான். அம் மனிதன் கருப்பு உடை தரித்துக் கொண்டிருந்தான். மிகவும் உயரமானவன். தோற்றம் அருவருக்கத்தக்கதா யிருந்தது.

சரோஜினிக்குக் கோபமும் திகிலு முண்டாயிற்று. தன் இச்சையாகத் திரியக் கூடிய சுதந்திர உணர்ச்சி பெற்ற மாதர்களுக்கு இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது இயற்கையே என்ற எண்ணத்தினல் சற்று திடங்கொண்டு, வேகமாக நடக்கலானுள். அம்மனிதன் அவளினும் வேகமாக நடந்து அவளை முன்னேறிச் சென்று வழிமறித்து,

—மன்னிக்க வேண்டும்! இக்கைகுட்டை தங்களுடையதோ?—என்று ஒரு கைக்குட்டையை எடுத்துக் காட்டினுன்.

அக் கைக்குட்டை சரோஜினியின் கைக்குட்டையல்லவென்பது அம்மனிதனுக்குத் தெரியும் என்பதை சரோஜினி யூகித்துக்கொண்டாள். அவளை மிகவும் வெறுப்புடனும், ஆத்திரத்துடனும் நோக்குகையில், அம்மனிதன் சரோஜினியை அதிசயத்துடன் பாதாதி கேச பரியந்தம் உற்று உற்றுப் பார்த்தான். அவன் முகத்தில் புன்சிரிப்பு ஏற்பட்டது. அவனுடைய பார்வையில் ஏதோ ஒரு கருத்து அடங்கி யிருப்பதாகக் கருதி சரோஜினி அஞ்சித் திகைத்து நின்ருள்.

—வந்தனம்! இது என்னுடைய தன்று—

எனப் பதிலளித்துவிட்டு அலட்சியமாக நடக்கலானுள். வெறிக்க சரோஜினியை உற்றுப்பார்த்த வண்ணமாகவே அவன் திரும்பி விட்டான். சரோஜினியின் மனக்கலக்கம் சிறிது நீங்கியது. இந்த சம்பவத்தை மனதை விட்டு அகற்றிவிடக் கூடுமான வரையில் முயற்சித்துப் பார்த்தாள். முடியவில்லை. இவ்வாறு ஒரு பயங்கரமான

மனிதன் தன்னைப் பின்பற்றி வந்து அடையாளம் பார்த்துப் போனதில் ஏதோ ஒரு விசேஷ மிருக்கவேண்டுமென்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டே கடற்கரையோரத்தில் ஒரு தனியிடந் தேடி உட்கார்ந்தாள்.

நீல நிறமுள்ள நிர்மலமான வானமும் கடலின் நீல நிறமும், அவற்றின்மீது சொர்ண மயமான அந்திக்கால சூரிய காந்தி பிரகாசிப்பதும், அதி அழகான காட்சிகளாயிருந்தன. சமுத்திரத்தின் மத்தியில் கொடூரமான கிரணங்களை யொழித்த சூரியன் கண்களால் பார்க்கக் கூடிய நேர்த்தியான சென்னிற கோளமாகப் பாதிவரையில் நீரில் மூழ்கித் தோன்றும் அற்புதமும், அச்சூரியனைச் சுற்றிலும் செவ்வரி படர்ந்திருக்கும் இயற்கை விநோதமும் காண்போர் மனோ சஞ்சலத்தைப் போக்கத் தக்கவையாயிருந்தது.

சரோஜினி அந்த அந்திவேளைக்கேற்ற மனோகரமான ஒரு நீலவர்ணப் பட்டாடையை யணிந்துகொண்டிருந்தாள். அந்நீலவர்ணப் பட்டாடைக்கிடையில் சொர்ண மயமான இளவெயிலினால் தாக்கப்பட்டஅவளது சரீரம் அச்சமயம் வானத்தில் வரவரப் பிரகாசங்குன்றி மறைந்து கொண்டிருக்கும் சூரியனைப்போல், கோடி சூரியர்கள் சேர்ந்த பிரகாசத்தையும் விழுங்கிவிடக் கூடிய ஆர்க்லைட் (Arc light) என்ற மின்சார ஒளியை யொப்ப பளபளவெனக் காந்தி வீசிக்கொண்டிருந்தது. சரோஜினிக்கு வயது பதினெட்டு. அழகும், இளமையும் உருக்கொண்டு வந்தனவோ என அமைந்த அவளது மேனி சரீர புஷ்டியாலும் நல்ல இரத் தோட்டத்தினாலும், பசுந்தளிர்போல் தளதளப்புடனிருந்தது. அவளது அவயங்கள் உருண்டு திரண்டு கடைந்தெடுத்தவைபோல் மழமழப்பாயிருந்தன. பருத்து விம்மிப் புடைத்திருக்கும் பயோதரங்கள் பார்ப்போர் நெஞ்சில் ஊடுருவிச் சென்று அவள்மீது கட்டடங்கா ஆசைத் தீயை மூட்டத்தக்கனவாக நிமிர்ந்து நின்று ஒய்யாரமாக இருந்தன. அவளது நீல விழிகள் அம்புபோல் பாயத்தக்கன இருண்டு சுருண்ட கூந்தல். அது அலட்சியமாகக் கோதப்பட்டு நெளிந்து நெளிந்து வளையம் வளைய

ாகச் சுருண்டடையந்து முகத்தில் பெரும் பாகத்தை மறைத்த வண்ணம் அதி அலங்காரமாகத் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால்—வானத்தினிடையே தவழ்கின்ற சந்திரனை மேகங்கள் மறைத்துக்கொண்டிருப்பதைப்போலிருந்தது. அழகின் சொரூபமான அந்நகை முகத்தில் மிளிரும் விழிகள் நளினம் செய்துகொண்டிருந்தன. மந்தகாசமும் நற்குணமும் தவழ்ந்த மதி முகத்தில், ரோஜாமலர் போன்ற கன்னங்களில், தண்ணீர்ச் சுழல்கள் போன்ற சிறு குழிகள் தோன்றி இயற்கையிலேயே அவள் உயரிய சுகபோகங்கட்குரியளென்பதை வெளியிட்டன. உருக்கிவிட்ட அபரஞ்சிப் பதுமை போன்றிருந்த அவ்வுன்னத மடந்தையின் எந்த அங்கத்தை நோக்கினாலும் மனம் தெவிட்டாமல் அதையே கண்டு ஆனந்தித்துப் பரவசமாகி நிற்கும். பருவகால வேட்கையால் தானே எழுகின்ற பஞ்சேந்திரிய சேஷ்டைகளும், நிமிரும், ஒயிலும் அவளிடம் மிதமிஞ்சிக் காணப்பட்டதுடன், அவற்றை ரகசியமாகக்கூடிய துணைவனின் வரவை அறியாவலுடன் எதிர்பார்த்து அவை துடி துடித்துக் கொண்டிருந்தன. அழகும், அழகிற்கேற்ற பருவமும், அப்பருவத்திற்கிசைந்த ஒயிலும், அவ்வொயிலுக்குப் பொருத்தமான காந்தியும், அக்காந்திக்குத் தக்க சாந்தமும், அமைந்த சரோஜினியின் தோற்றத்தைக் காண்போர்—சற்று திகைத்து நேத்திரானந்தமாக அவ்வழகைக் கண்டு மகிழ்ந்து நின்றே அப்பால் செல்வார்கள்.

"அழகாயிருப்பதினால்—அழகைக் கண்டு வியக்கத் தக்க உடன் துணையற்ற அழகினால்—என்ன பயன்? அனுவசியமாகப் பார்த்துப் பிரமிக்கின்றவர்களுடைய கவனத்திற்குத்தான் ஆதாரவாயிருக்கின்றது" என்று சரோஜினி தனக்குள் ஒரு கேள்வியை எழுப்பி அதற்குச் சமாதானமும் சொல்லிக்கொண்டாள். முதலில் தன் மாளிகையின் முகப்பிலும், பின்பு ஒட்டலிலும், தற்செயலாகச் சந்தித்த அந்த வாசுதேவனுடைய ஞாபகம் அவள் மனதில் மீண்டும் உதித்தது.

அவன் பெண்களை வெறுப்பவனாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட வரையில் யோக்கியனாக இருந்த போதிலும், தன்னை வெறிக்க வெறிக்கப் பன்முறை கவனித்துப் பார்த்ததிலிருந்து சரோஜினிக்கு அவன்மீது சற்று அருவருப்பு உண்டாயிற்று. சரோஜினியைப்போல் துணையின்றித் தான் தோன்றிகளாக எதேச்சையாய்த் திரியும் பெண்களுக்கு இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படுதல் சகஜமேயாகும்.

ஓட்டலிலிருந்த வாசுதேவன் திடீரெனக் கடற்கரையில் சரோஜினியின் எதிரில் தோன்றினான். அவன் இவளைப் பாராதவன் போல் அபிநயித்துக்கொண்டு அலட்சியமாக நின்றபோதிலும், ஜாடையாக அவனுடைய கண்கள் சரோஜினியின் மீது அடிக்கடி பாய்ந்தன. அதைப் பார்த்துப் பார்த்து சரோஜினியின் கண்கள் துள்ளிக் குதித்து, வாசுதேவனைப் பார்க்காம லிருப்ப தென்றாலும், அவை அவளது உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுதளித்து விட்டன. கன்னங்கள் சிவந்தன. சாடையாக அவனைப் பார்க்கப் பார்க்க அவளை யறியாமலே முகத்தில் புன்னகை எழும்பிற்று. வாசுதேவன் அவ்விடத்தினின்றும் அப்பால் சென்று விட்டான். அவன் கண்ணிற்கு மறைகின்ற வரையில் சரோஜினி அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வாறு அவளை யறியாமலே சரோஜினியின் மனம் வாசுதேவனைப் பின்பற்றிச் சென்ற காரணமென்ன? அதை இன்னும் அவள் அறிந்து கொள்ளவில்லை.

அத்தியாயம்—3.

வாசுதேவன்—ஆபத்தில் காப்பாற்றிய அன்பன்.

நாகரீகம் படித்த நங்கையர்கள் உல்லாசக் காலப் போக்கிற்காக நாடகசாலைகளுக்குச்செல்லும் வழக்கப்படி, அன்றிரவு சரோஜினி ராயல்

தியேட்டருக்குச் சென்று முன் அணியிலிருந்த சோபாக் களிலொன்றில் ஆடம்பரமாக உட்கார்ந்திருந்தாள். அவளுக் குப் பின்புறம் கடை கோடியில் சரோஜினியிடம் கடற்கரை யில் கைக்குட்டையைக் கொண்டு வந்து கொடுக்க வந்த அவ்வுயரமான மனிதன் உட்கார்ந்து சரோஜினியை அடிக் கடி கூர்மையாகப் பார்த்தவண்ணமாகவே இருந்தான். மற்றோர் பக்கத்தில் வாசுதேவன் தன் நண்பர் சிலருடன் உட்கார்ந்து அவனும் சரோஜினியைப் பார்த்த வண்ணமாக வேயிருந்தான். இருபுறங்களிலிருந்தும் இவ்விருவரும் மத்தியிலிருந்த சரோஜினியை இலக்காக்கி கண்ணம்பை எய்தார்கள்.

தன் வாழ்க்கையில் அன்றுமுதல் ஒரு புது நாடகம் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக சரோஜினி கருதினாள். நாட கக் காட்சியில் ஒரு காதலனும், காதலியும் ஆர்வத்துடன் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொள்வதை அவள் பார்த்த போது சரோஜினியின் கைகள் அவள் மார்பின்மீது வைக் கப்பட்டு பலமாக அமுக்கப்பட்டன. உடனே தனக்குள் அவள் கேட்டுக்கொண்ட கேள்விக்கு இருதயம் பதிலளித்து விட்டது. இவ்வுலக வாழ்க்கையை ரசிகரமாக்குதற்குக் காதல் இன்றியமையாத தன்றோ?—ஆம்!

இந்த சந்தர்ப்பத்தில் அதி உல்லாசமாக அமர்ந் திருந்த வாசுதேவனைப் பார்ப்பதற்காக அவள்முகம் தானே திரும்பிக்கண்கள் தாமே சுழன்றது, அவளுக்கே ஆச்சர்யமா யிருந்தது.

சோம்பல் முறித்துக் கொள்கின்ற பாவனையாகச் சரீ ரத்தைச் சிறிது நொடித்துக் கொண்டாள். இதுவரையில் வாசுதேவனைத் தவிர்த்து தன் கண்முன் தென்பட்ட எந்த ஆடவனையும் கவனித்துப் பார்க்க அவள் கண்கள் எத்த னித்ததில்லை. உலகில் காதல் கிடைத்தற்கரிய பொரு ளென்றும், அதையடைந்தவர்களே பாக்கியசாலிகள் என் றும், சகல கலாவல்லியாகிய சரோஜினி நன்கறிவள். பல வழியில் என்னென்ன விதமாகவோ குழம்புகின்ற மனதை

அவளால் திடப்படுத்திக்கொள்ள முடியாமல் தவிக்கலானாள்.

நாடகம் முடிந்தது. சரோஜினி தன் மோட்டார் வண்டியிலேறி மாளிகைக்குச் செல்லலானாள். அன்றைய தினம் வானம் நிர்மலமா யிருந்தமையால், நிலாவெளிச்சம் மிகத் துல்லிதமாயிருந்தது. மோட்டார் வண்டி கடற்கரையோரமாக அதி வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தது.

நிசப்தமான இரவு. மிகக்குளிர்ச்சியான கடற்காற்று ஜில்லென வீசிற்று. காதலர்கட்கு மனோகரமான வெண்ணிலாக்காட்சி! இவைகள் எவர் மனதையும் பரவசமாகக் கூடியவையன்றோ? நடு நிசியின் அமைதியினிடையில் கடல் அலையின் ஓம் என்ற தொனி ஒருவகை ரீங்கார சத்தமாக எங்கும் சூழ்ந்துகொண்டிருந்தது. சரோஜினி மோட்டார் வண்டியைச் சற்று நிறுத்தச்சொல்லி கொந்தளிப்பற்ற நிம்மதியான கடலின் இயற்கைத் தோற்றத்தைப் பார்த்தாள். கருங்கடலில் பிரகாசமான சந்திர பிம்பத்தின் சாயல் உரு வெளித்தோற்றத்தின் முடிவு (Horizon) வரையில் கடலில் ஜோதி சொரூபமாக ஏற்பட்ட ஒருவழி நடைப் பாதையைப்போல் நெடுகத் தோன்றியது. இதுவே கனுத்தோற்றங்களின் வழியாகும். அந்த ஜோதிச் சுடரின் வழியாகக் கிடைத்தற்கரிய இகலோக சாம்ராச்சியமான ஒரு பெரு நிதியைத் தேடிச்செல்லுமாறு சரோஜினி தன் மனதைப் பிரயாணப்படுத்தி யனுப்பினாள்.

—எதைத் தேடுதற்கு ?

திடீரென மற்றோர் மோட்டார் வண்டிவந்துநின்றது. உடனே சரோஜினியின் டிரைவர் பயங்கரமாக அலறினான். திடுக்கிட்ட அவ்வனிதை என்னவென்று கவனித்துப்பார்க்கையில் டிரைவருக்கு எதிராக கருப்பு உடுப்பும் முகமூடியும் அணிந்துகொண்டிருந்த ஒரு மனிதன் கைத்துப்பாக்கியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு நடுநடுங்கி பீதியடைந்த சரோஜினி மோட்டாரின் கதவைத் திறந்து கீழே இறங்க எத்தனித்தாள். அதேமாதிரி கருப்பு உடுப்பும் முகமூடியும் தரித்துக்கொண்டிருந்த மற்றோர்

மனிதன் சரோஜினியைப் பலமாகப் பிடித்துக்கொண்டு வாயைக் கெட்டியாக அமுக்கிய வண்ணம்,

நீலலோசனி ! உன் விளையாட்டுகளெல்லாம் முடிந்து விட்டன அல்லவா? எங்களை உன்பழைய நண்பர்களாகவே பாவித்துக்கொண்டு வந்து விடு. இல்லையேல்—

என்று கூறுகையில் முகத்தின்தோற்றத்தை அடையாளங் கண்டுபிடிக்கக் கூடாவாறு அவன் முகத்தை மூடிக் கொண்டிருந்த போதிலும், கழுகின் கண்களைப்போல் ஊடுருவிப் பாயத்தக்க பயங்கரமான அவன் கண் ஒளியினின்றும், அவன் குரலிலிருந்தும், அன்று மாலை கடற்கரையில் தன்னை வழி மறித்துக் கைக் குட்டையைக் கொண்டுவந்து கொடுக்க வந்த மனிதனே அப்பயங்கரமான மனிதன் என்பதை சரோஜினி அறிந்துகொண்டாள். அவன் பிடியினின்றும் உதறிக்கொள்ள முயற்சித்தாள். வெகு பலமான இரும்புப் பொறியினுல் பிடிக்கப்பட்டதைப் போன்றிருந்த அழுத்தமான பிடிப்பைக் கேவலம் ஒரு பெண்பிள்ளை எங்ஙனம் நீக்கிக்கொள்ள இயலும்? அவளை அப்படியே தூக்கிக்கொண்டுபோய் அம்மனிதன் தன் காரில் ஏற்றி வைத்துக் கெட்டியாக அமுக்கிக்கொண்டு,

—நீலலோசனி! உயிர் அதிக மேன்மையான தன்றோ? அனுவசியமாக அதை ஏன் நீ இழக்கவேண்டும்? உன்னை உயிருடன் பிடிக்கவேண்டு மென்பதே எங்கள் ஆக்ஞை. ஆனுல் ஏதாவது கூக்குரல் போட்டுச் சந்தடி செய்தால்—என்று அவன் கூறுகையில் ஒரு கைத்துப்பாக்கி சரோஜினியின் மார்பின்மீது வைக்கப்பட்டது.

மற்ருேர் கார் விர்ரென்று அதிவேகமாகப் பறந்தோடி வருகிற சப்தம் கேட்டது. படீர் என்ற ஒரு துப்பாக்கி வெடி எழுந்தது. சரோஜினியை ஏற்றிச் சென்ற காரின் டயர் டப் என்று வெடித்தவுடன் கார் திடீரென நிறுத்தப் பட்டது. டம் டம் என்று துப்பாக்கி வெடிகள் பறந்தன. சரோஜினியைக் கைப்பற்றிக்கொண்டுபோன கருப்பு உடை தரித்த மூன்று மனிதர்களும், அவளைப் பின்பற்றி வந்த

காரிலிருந்த ஐந்து ஆசாமிகளும், பிரமாதமாகச் சண்டையிட்டுக் கொண்டார்கள். உடல் நடுக்கத்துடன் சரோஜினி இந்த சண்டையைப் பார்த்துப் பீதிகொண்டு வெடவெடவென நடுங்கக் காரிலேயே உட்கார்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் சரோஜினி மற்றோர் காருக்கு மரியாதையாக அழைத்துப் போகப்பட்டாள். ரஸ்தாவில் மூவர் பிரக்ஞையற்றுக் கிடந்தார்கள். அந்தக் கார் வேகமாகச் சென்றது. காரை ஓட்டிச் சென்ற மனிதன் சரோஜினியைத் திரும்பிப் பார்த்து,

—இன்றிரவு நாடகத்திற்குப் பின் இது ஒரு சில்லறை நாடகம். ஆனால் இத்துடன் முடிந்து போகாது—என்றான்.

சரோஜினி திடுக்கிட்டாள்! திகைத்தாள்! பிரமித்தாள்! அதிசயித்தாள்! ஏன்?

அவளைத் திரும்பிப் பார்க்கும் பிரகாசமான கண் ஒளியும், பேசும் மதுரமான குரல் ஒலியும், வாசுதேவனுடையன.

அத்தியாயம்—4.

மீண்டும் ஆபத்து—அவள் என் மனைவி!

பேச எத்தனித்த சரோஜினியை—இப்பொழுது பேசவேண்டாம்—என்று வாசுதேவன் எச்சரித்தான். கார் அதிவேகமாகச் சென்றது. இன்ன இடத்திற்குப் போகிறதென்று விசாரிக்கவும் சரோஜினி அபிப்பிராயப்படவில்லை.

கடைசியாக ஒரு சிறிய பங்களாவில் வந்து இவர்கள் இறங்கினார்கள். அந்த பங்களா சுற்றிலும் மனித சஞ்சாரமற்ற ஏகாந்தமான விடத்திலிருந்தது. வாசுதேவன் சாவ

தானமாக ஒரு சோபாவின் மீது உட்கார்ந்து சரோஜினியை அவன் எதிரில் உட்காரச் சொன்னான்.

—உனக்கு இன்னும் ஆபத்திருக்கின்றது. அந்த பயங்கரமான ஆசாமிகள் இங்கும் உன்னைத் தேடிக்கொண்டு வரலாம் என்றான் வாசுதேவன்.

மிகப் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்த மின்சார வெளிச்சத்தில் சரோஜினி வாசுதேவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தபோது அவள் முகத்தில் நாணம் குடியேறியதால் கன்னங்கள் சிவந்தன.

—என்னை எதற்காக இங்கே அழைத்துக்கொண்டு வந்தீர்கள் என்று கேட்டாள்.

வாசுதேவன் தன் சட்டைப் பையிலிருந்த ஒரு தங்க சிகிரேட் டப்பியை எடுத்து சரோஜினியின் எதிரே நீட்ட அவள் வேண்டாமென்று மறுதளித்தபோது தான் சிகிரேட் பிடிப்பதில் ஆட்சேபமில்லையே என்று கேட்டுக்கொண்டே ஒரு சிகிரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

—இந்த பங்களா என் நண்பன் ஒருவனுடையது. அவர் தற்சமயம் இந்த ஊரிலில்லை. இன்று நடந்த சம்பவங்களின் உண்மையை நீயறிந்து கொண்டால் கொஞ்ச காலத்திற்கு முன் சாக்கிரதையுடனிருப்பாய். உன்னைப் பெரியதோர் ஆபத்து சூழ்ந்து கொண்டிருக்கிறது என்றான் வாசுதேவன்.

—அந்த மனிதர்கள் என்னை எதிர்க்கவேண்டிய காரணம் என்ன?

காரணம் தான் விபரீதமாயிருக்கின்றது. உன்மீதுள்ள வைர நகைகளை அபகரிக்க அவர்கள் எண்ணி இருந்தால் உன்னைக் கைப்பற்றிக் கொண்டுபோக வேண்டியதில்லையே.

—இந்த இடத்திற்கும் அவர்கள் என்னைத் தேடிக்கொண்டு வருவார்களோ?—

—ஓ! அவசியம் வருவார்களென்றே எதிர்பார்க்கின்றேன். எனக்குச் சில சந்தேகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. வேறொரு ஆசாமியைத்தேடிக்கொண்டு அவர்கள் திரிகின்றார்கள். நீதான் அவள் என்ற சந்தேகம் தீருகின்ற வரையில் உனக்குப் பெரிய ஆபத்து ஏற்படக்கூடும். அது வரையில் முன் சாக்கிரதையுட னிருப்பது நலம். அக்கொடிய மனிதர்களின் கையில சிக்கிக்கொண்டால் மீள்வது கஷ்டம்—என்றான் வாசுதேவன்.

சரோஜினி அதிகக் கவலையுடன் தன்நிலைமையைப் பற்றிச் சிந்திக்கலானாள். அவள் மனம் பலவழியில் சுழன்றது. இந்த ஆச்சர்யகரமான சம்பங்களெல்லாம் அவளுக்குச்சித்தப் பிரமையை யுண்டாக்கின. வாசுதேவன் சரோஜினியை பாதாதிகேச பரியந்தம் உற்றுப்பார்த்தான். தன் மாளிகையின் எதிரில் முதன் முதல் அவன் பார்த்த இதே பார்வை சரோஜினிக்கு அச்சமயம் வெறுப்பையுண்டாக்கிற்று. ஆனால் வாசுதேவன் தன் உயிரையும் பொருள் படுத்தாமல் அவளைக் காப்பாற்றியவன். அப்படிப் பட்டவனுக்கு அவளைப் பார்க்க சுதந்திர மில்லையா?

—ஓ!தோற்றம் ஒரே மாதிரியாக இருக்கின்றது. என்ன ஆச்சரியம்! சிருஷ்டியின் இயற்கை அற்புதங்களை யாரால் கண்டுபிடிக்கமுடியும்? முதலில் என்கண்களே ஏமாந்து விட்டன—என்று கூறிக்கொண்டே வாசுதேவன் தலையை யசைத்துக் கொண்டான்.

—ஓ! எனக்கும் சிறிது சந்தேகம் ஏற்படுகின்றது. நீலலோசனி என்ற பெயருக்கும் இன்றைய சம்பவங்களுக்கும் ஏதாவதுசம்பந்தமுண்டோ—என்று சரோஜினி வினவினாள்.

இப் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் வாசுதேவன் திடுக்கிட்டான். அவன் முகத்தில் வெறுப்பும், கோபமும், ஆங்காரமும் தோன்றின.

—அப்பெயரை நீ எவ்வாறு அறிந்துகொண்டாய்?—

என்று வாசுதேவன் ஆச்சர்யத்துடன் வினவினன் அச்சமயம் திடீரென்று பலர் பங்களாவில் புகுந்தார்கள். அவர்களில் ஒருவன் கைத்துப்பாக்கியை உயர்த்திக் கொண்டு வாசுதேவன் எதிரில் பாய்ந்தான்.

—நண்பனே! எனக்கும் இந்த வேடிக்கைகளெல்லாம் காட்டத் தெரியும். துப்பாக்கி சுடுவதில் உனக்கு நான் இளைத்தவனல்ல. ஆயினும் நாமிருவரும் எதற்காக அனாவசியமாகச் சச்சரவிட்டுக் கொள்ளவேண்டும். மேற்கொண்டு இதோ இருக்கிற பொத்தானை அமுக்கினால் போதும். இது அபாய அறிக்கை யாதலால் நீங்கள் அத்தனை பேரும் அதே நிமிஷத்தில் போலீஸ்காரர் வசப்படுவீர்கள் என்பது நிச்சயம். இம்மாதிரி நீங்கள் என்னை எதிர்க்க வருவீர்களென்றே எச்சரிக்கையுடன் உங்களை வரவேற்பதற்காக நான் முன் ஏற்பாடுகள் செய்து வைத்திருப்பேனல்லவா? எதற்காக நீங்கள் இவ்வளவு சிரமப்படுகின்றீர்கள்? இந்தப் பெண்ணை ஏன் அனாவசியமாகத் துரத்துகின்றீர்கள்? உண்மையைச் சொன்னால் நான் உங்களுக்குக் கூடுமான வரையில் உதவியே செய்கின்றேன்—என்றான் வாசுதேவன்.

—நாங்கள் அந்தப் பெண்பிள்ளையை உயிருடன் பிடித்துக்கொண்டு போகவேண்டும்—என்றான் அம்மனிதன்.

—நீ யாரைத் தேடுகின்றாய்?

—நீலலோசனியை.

இதைக்கேட்டு வாசுதேவன் கலகலவென நகைத்தான்.

—நண்பர்களே! நீலலோசனி தற்சமயம் அமெரிக்கா தேசத்திலிருப்பதாகப் பிரஸ்தாபம். நீங்கள் மோசம் போனீர்கள். உங்கள் நிலையில் நானிருந்தாலும் நானும் இவ்வாறுதான் ஏமாற்றமடைந்திருப்பேன். நீங்கள் யாராவது நீலலோசனியை நேரில் பார்த்திருக்கின்றீர்களா? —

— இல்லை அவளுடைய புகைப்படத்தைதான் பார்த்திருக்கின்றோம்.—

—ஓ! நீங்கள் நீலலோசனியை நேரில் பார்க்கும் காலத்தில் உங்கள் குற்றத்தை யுணர்ந்து கொள்வீர்கள். இப்பெண் நீலலோசனியன்று. இவள் என் மனைவி—என்னை நீங்கள் யாரென்று அறிந்துகொள்ள வேண்டுமானால்—என்று ஒரு பெயர் குறிப்புச் சிட்டை (Visiting card) எடுத்து அலட்சியமாக மேஜையின் மீது எரிந்து—நண்பனே! இனி நீ என்னை இன்னாரென்று அறிந்துகொள்வாய்—என்றான் வாசுதேவன்.

பெயர் குறிப்புச் சிட்டைப் பார்த்த மாத்திரத்தில் அம்மனிதனுக்குத் திகிலும் உடல் நடுக்கமும் உண்டாயின. படமெடுத்துத் தலைவிரித் தாடுகின்ற பாம்பு கீரிப்பிள்ளையைக் கண்டவுடன் ஒடுங்குவதைப் போல், சோர்வடைந்து அசதியுடன் ஓர் இடத்தில் உட்கார்ந்தான்.

—நண்பனே! நீலலோசனியை நீங்கள் கவலையுடன் தேடிக் கைப்பற்றக் கூடியவர்களென்றே உங்களைப் போலீஸார் வசம் ஒப்புவிக்காமல் விடுகின்றேன். என் மனைவியாகிய இப்பெண்ணும், நீலலோசனியும் ஒரே மாதிரியான தோற்றத்துடனிருக்கின்றார்கள். ஆதலால் இனி ஏமாறாதீர்கள்—என்றான் வாசுதேவன்.

அம்மனிதர்கள் மிக்க நன்றியறிதலுடன் வந்தனம் செய்து விட்டுப் புறப்பட்டார்கள்.

—அவள் என் மனைவி! என் மனைவி!—என்று இரு தடவை வாசுதேவன் அழுத்தமாகக் கூறியது சரோஜினியின் இருதய கமலத்தைப் பிளந்தது.

—ஞானவானே! எதற்காக நீங்கள்—என்று அவள் பேச எத்தனிக்க,

—என் மனைவி என்று சொன்னீர்கள்—எனக் கேட்கப் போகின்றாயோ? என்று வாசுதேவன் புன்சிரிப்புடன் கேட்டான்.

சரோஜினி ஒன்றும் பதிலளிக்க முடியாமல் திகைத்தாள்.

—அந்த அபாயகரமான மனிதர்களிடமிருந்து உன்னைத் தப்ப வைப்பதற்காகவே இக்கதையைக் கட்டி விட்டேன்—என வாசுதேவன் கூறி மறுபடியும் நகைத்தான்.

—அவர்களை ஏன் தாங்கள் போலீஸ்காரர் வசம் ஒப்புவித்திருக்கக் கூடாது?—என்றாள் சரோஜினி.

—அதற்கெல்லாம் ஒரு காரணமிருக்கின்றது. இனி இச்சென்னையில் நீ தனிமையாக இருப்பது அபாயமாகும். நீலலோசனி என்ற பெண்ணைக் கைப்பற்றச் சிலர் தேடித் திரிகின்றார்களென்பதை நானறிவேன். அவர்களில் யார் கண்ணிலகப் பட்டாலும் னக்குத் தீங்கு நேரிடாமலிராது. ஆதலால் உன் நன்மையை உத்தேசித்து என் மனைவி என்று நடிப்பதில் உனக்குச் சௌகர்யமுண்டு.

—அவ்விதம் நடிக்க நான் உடன்பட முடியாது.

—அவ்விதம் நடித்தே ஆகவேண்டும். இல்லையேல் இச்சென்னையிலிருந்து நீ உயிருடன் உன் சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லமுடியாது. நீ என் மனைவியாக நடிப்பதினால் உண்மையாகவே மனைவியாய் விடமாட்டாய்—என்று வாசுதேவன் பரிகாசமாகக் கூறினான்.

சரோஜினி எவ்வித பதிலும் சொல்ல முடியாமல் திகைத்தாள். வாசுதேவன் மகா அற்புதமான அழகு வாய்ந்த யௌவன சுந்திரன். அழகு வழிந்த முகமும், அதில் அதிக விசாலமாகப் பாவி பளபளப்பும், தெளிவும், புத்தி கூர்மையும் நிறைந்திருந்த நெடிய விழிகளும், கபடமற்ற பார்வையும், மேன்மையான குணங்களும், மதுரவசனமும், குற்றமற்ற ஒழுக்கமும், பரோபகார சிந்தையும், இன்னும் இவைபோன்ற எண்ணிறந்த பல கவர்ச்சிகளையும் கண்ட சரோஜினியின் மனம சஞ்சலப் படாமலிருக்குமா?

அத்தியாயம்—5.

நவநாகரீகம் விருந்தில் நிர்த்தன கிரகப்பிரவேசம்.

ஸ்ரீ கோடீஸ்வரனாகிய வாசுதேவனுடைய அரண்மனை போன்ற மாளிகையின் உப்பரிகையிலிருந்து சரோஜினி நவநாகரீகத்திற் குறைவிடமாகிய சென்னைமாநகரின் நாற்றிசையும் பார்த்தாள். அவளுடைய கண்கள் கருத்தோற்றத்தில் மூழ்கியிருந்தன. தன் வாழ்க்கையிலேயே ஒரு அதிசயமான மாறுதல் ஏற்படப் போவதாக எண்ணினாள். வாசுதேவனுடைய மாளிகைக்கு வந்து பதினைந்து தினங்களாய் விட்டன. முந்தினசம்பவங்களெல்லாம் அவளுக்கு ஆச்சரியத்தையும், வியப்பையும் உண்டாக்கின.

சரோஜினி திருநெல்வேலியிலுள்ள ஒருபெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தகப்பனார் அவள் குழந்தையா யிருக்கும்போதே இறந்துவிட்டார். தாயார் இரத்தினவல்லியம்மாள் கல்வி கேள்விகளில் ஆர்வ முள்ளவளாகையால் சரோஜினியின் கல்வி அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்தலானாள். கீழ்தாக் கல்வி முடிந்தவுடன் சரோஜினி உயர்தரப் படிப்பிற்காகச் சென்னையிலுள்ள பெண்களின் கலாசாலைக்கு வந்து சேர்ந்தாள். கலாசாலையில் படிக்கும்போதே அவளுக்கு சுதந்திர உணர்ச்சி வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. இந்து தேசத்தில் பெண்கள் மிகக் கேவலமாகப் பாவிக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப் படுவதைப் பார்த்து அவள் ஆத்திரப்படுவாள். விவாகபந்தத்தினால் தனது சுயேச்சை ஒடுக்கப் படுவதாயிருப்பின் அத்தகைய அடிமை வாழ்க்கையில் ஈடுபடுவதைவிடக் கன்னிகையாக இருந்து விடுதல் நலமெனத் தீர்மானித்தாள். கலாசாலைப் படிப்பு முடிந்தபின் சரோஜினி திருநெல்வேலியில் வந்து சிறிது காலம் தங்கியிருந்தாள்

நாகரீக வாழ்க்கையில் வேட்கைகொண்ட அவள் மனம் கிராம வாசத்தை எங்ஙனம் ஏற்றுக்கொள்ளும். பறுபடியும் சென்னைக்கே திரும்பிவிட்டாள். சென்னையிலுள்ள சுதந்திரபவனம் என்னும் மாளிகையில் செல்வத்தினுல் தேடக்கூடிய சகல ஆடம்பரங்களுடன் சரோஜினி மனோ உல்லாசமாக வாழ்ந்து வருகையில் முந்தின சம்பவங்களெல்லாம் அகஸ்மாத்தாய் நிகழ்ந்தன.

சரோஜினி மனோராச்சியத்தில் ஈடுபட்டிருக்கையில் வாசுதேவன் எதிரில் வந்து நின்றான்.

—இந்த மாளிகையிலிருப்பது உனக்கு சௌகர்யக் குறைவாக இருக்கின்றதோ? நீ என் மனைவியாக நடிப்பதினுல் உனக்கு ஏற்படக்கூடிய ஆபத்து விலகிவிடும் என்பதில் ஒரு ரகசியம் அடங்கி யிருக்கின்றது. சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதைப் பின்னுல் நீ யறிந்து கொள்ளலாம்— என்றான்.

நீலலோசனி! என்ற பெயரில் ஏதோ ஒரு அந்தரங்கம் அடங்கியிருக்கின்றது. அந்த ரகசியம் வாசுதேவனுக்குத் தெரியாததன்று. ஆனுல் அதைப்பற்றி சரோஜினி எவ்வளவு வற்புறுத்தியும் வாசுதேவன் பதிலளிக்க மறுத்துவிட்டான். ஆரம்பத்தில் ஓட்டலில் ஒரு வாலிபனும் பெண்ணும் பேசிக்கொண்டிருந்ததற் கிணங்க வாசுதேவன் பெண்களை வெறுப்பவனல்லன் என்பதைத் தன் வரையில் அவன் நடந்துக்கொண்ட மாதிரியிலிருந்து சரோஜினி அறிந்து கொண்டாள். அவன் வாழ்வில் துக்ககரமான ஒரு மர்மம் இருப்பதாகவும், அதை வெளியிட அவன் மனம் இசையவில்லை என்பதும், சரோஜினிக்குப் புலனுயிற்று. வாசுதேவன் தன் உயிரையும் பொருள் படுத்தாமல் சரோஜினியை ஆபத்திினின்றும் காபாற்றியிருக்கின்றான். சரோஜினி இத்தகைய பேருதவிக்குக் கைம்மாறுக வாசுதேவனிடம் அளவு கடந்து கடமைப்பட்டிருக்கின்றுளன்றோ?

வாசுதேவனும், சரோஜினியும் அதிக நெருக்கமாகப் பழகிய போதிலும் இளமையும் ஆர்வமுமுள்ள ஸ்திரி புருஷர்களுக்குள் இத்தகைய சந்திப்பு ஏற்பட்டால் இயற்கை

யாக எழக்கூடிய மனோ அமைதியின்மை எதுவும் வாசுதேவனிடம் காணப்படவில்லை.

வாசுதேவனுடைய மனதில் வெளியிட முடியாத துக்கம் குடியேறி இருந்தது. அவன் முகத்தில் எக்காலத்திலும் சந்தோஷமே ஏற்பட்டது கிடையாது. யாரோ ஒரு பெண்ணினால் அவன் வாழ்நாளில் ஒருக்கால் துன்பமடைந்திருக்கவேண்டுமென்று சரோஜினி எண்ணினாள், மகா பரிசுத்தமான இருதயத்தையுடைய அவன் காதலையடையும் பெண் மிகுந்த பாக்கியசாலியாக இருப்பாள்—என்று சரோஜினி பலவாறு ஆலோசித்துக்கொண்டிருக்கையில்,

—சரோஜினி! ஆடையாபரண மணிந்துகொண்டு சித்தப்படுவாயாக. எனது நண்பர் ஒருவர் மாளிகையில் நடைபெறும் விருந்திற்கு நாம் செல்லவேண்டும். சீக்கிரம்—என்று கூறி வாசுதேவன் பிரயாணத்திற்குச் சித்தமானான்.

—அவ்விடத்திலும் தங்கள் மனைவி என்று நடிக்கவா? —என்று சரோஜினி விளையாட்டாக ஒரு வினா நிகழ்த்தித் தன் அதரங்களை மலர்த்தி அழகாக நகைத்தாள்.

—சரோஜினி! "கண்டதேகாட்சி கொண்டதே கோலம்" என்ற கொள்கையை யுடையவனாகிய நான் நாளைக்கு என் வாழ்நாளில் என்ன நேரிடப்போகிறதென்பதைப் பற்றியே ஒருக்காலும் சிந்திக்க மாட்டேன். விருந்திற்கு வந்திருக்கும் என் நண்பர்களெல்லாம் திடீரென்று நான் விவாகம்செய்துவிட்டேனென்று நினைத்துக் கொண்டபோதிலும் அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. அடுத்த வாரத்திலேயே அந்த மனைவியை நான் சீவனாம்சம் கொடுத்து விலக்கிவிடக் கூடுமென்றும் அவர்களே நினைப்பார்கள். ஆதலால் —என்று வாசுதேவன் எதையோ பேச ஆரம்பித்து அந்த விஷயத்தை அத்துடன் அடக்கிக்கொண்டான். வாசுதேவனுடைய வார்த்தைகள் பொருள் விளங்காத மர்மமாக இருந்தன.

சென்னையிலுள்ள பிரபல கனவான்களில் ஒருவராகிய மதனகோபாலர் மாளிகையில் அதிக ஆடம்பரமான விருந்து

நடைபெறுதற்கு ஏற்பாடாயிருந்தது. அநேகம் மோட்டார் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்ருக வந்துகொண்டிருந்தன. விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு செல்வச் சீமான்களும், சீமாட்டிகளும் வயோதிகர்களும், இளைஞர்களும், காதலர்களும், காதலிகளும், அவைகளிலிருந்து இறங்கி மாளிகையின் வாயிலில் நின்றுகொண்டிருந்த மதனகோபாலர் தம்பதிகளால் வரவேற்கப்பட்டு மரியாதை நடந்தபின் உள்ளே நடக்கும் குதூகல அமளியில் கலந்துகொண்டார்கள்.

மாலை 6 மணிக்கெல்லாம் பல வர்ணமுள்ள மின்சார விளக்குகள் பத்திபத்தியாக அலங்கரித்துக்கொண்டு பிரகாசித்தன. பாண்ட் வாத்தியம் முழங்கிற்று. விருந்தினர் அவரவர் மனே அபிப்பிராயப்படி அவரவர் மனதிற்கிசைந்த உல்லாசங்களில் ஈடுபட்டார்கள். சிலர் போஜன வகைகளிற் பிரியப்பட்டார்கள். சிலர் பான தினுசுகளைக் கூடுமான வரையில் ஒரு கைபார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலர் பெண்களுடன் சிரித்துக்கொண்டும், பரிகசித்துக்கொண்டும், உல்லாசமாகக் காலம் போக்கினர்கள். இன்னுஞ் சிலர் இதுதான் நல்ல சந்தர்ப்பமென்று காதல் வேட்டையிலிறங்கினர்கள்.

—ஆ! வாசுதேவா! இவ்வளவு காலதாமதமேன்? இவ்வழகியோ உன் புதிய மனைவி?—என்று மதனகோபாலர் சரோஜினி வாசுதேவனை அன்புடன் வரவேற்ருர்.

—இவ்வழகிற் சிறந்த ஆரணங்கோ தங்கள் மனைவி—என்று மதனகோபாலரின் மனைவி சரோஜினியின் கையைப் பிடித்தழைத்துக்கொண்டுபோய் விருந்திற்கு வந்திருந்த கனவான்களுக்கும், சீமாட்டிகளுக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

ஒரு நாடகத்தில வேடந் தரித்து நடிப்பதாக நினைத்து சரோஜினி முதலில் அளவுகடந்த ஆனந்தமடைந்தாள். பின்னர் ஒருவனுடைய மனைவியாக நடிப்பது அவளுக்கு லச்சையாக இருந்தது. வாசுதேவனுடைய மனைவி என்ற அளவில்

யலர் பிர்மிப்புடனும், திகைப்புடனும், சரோஜினியைக் கவனிக்கலானார்கள். ஏற்கனவே வாசுதேவனை விவாகம் செய்துகொள்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பல சீமான் வீட்டுப் பெண்களுக்கு சரோஜினியின் மீது பொறாமையினால் வெறுப்புண்டாயிற்று.

கடைசியாக சரோஜினி புதுவை நகரிலிருந்து சென்னைக்கு விஜயம் செய்திருக்கும் தயானந்தப் பிரபுவிற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டாள்.

தயானந்தருடன் கைகுலுக்கப் புகுந் தருணம் தயானந்தப் பிரபுவை சரோஜினி கூர்மையாகக் கவனித்தாள். கடற்கரையில் தன்னைக் கைப்பற்றிக் கொண்டுபோன பயங்கரமான மனிதனே தயானந்தப் பிரபு என்பதை அவள் அறிந்தவுடன், அவள் சரீரம் நடுங்கிற்று. "இந்த மாளிகையில் அவனுக்கு என்ன வேலை"? என்று ஆலோசித்தாள்.

தயானந்தப் பிரபு சரோஜினியின் அருகாமையில் ஒரு சோபாவில் அமர்ந்தார்.

—நாம் மறுபடியும் சந்தித்தது நன்மையே! இந்த சந்திப்பு அவசியம் ஏற்படவேண்டுமென்றே நான் எதிர் பார்த்தேன்—என்றார் தயானந்தர்.

சரோஜினி அவர் வார்த்தைக்குச் செவி கொடாமல் அலட்சியமாயிருந்தாள்.

—நான் உன்னை நீலலோசனி என்று தப்பாக எண்ணியதால் அத்துக்ககரமான சம்பவம் நிகழ்ந்தது. ஆனால் உன் தோற்றமும், நீலலோசனி தோற்றமும் சிறிதளவேனும் வேற்றுமையின்றி ஒரே மாதிரியாக அமைந்திருப்பது ஆச்சர்யம். நீ வாசுதேவருடைய மனைவியாக இராமலிருந்தால் உன்னை நீலலோசனி என்றே நான் இன்னும் கருதுவேன்—என்று தயானந்தப் பிரபு கூறி சரோஜினியை முறைத்துப் பார்த்தார். சரோஜினிக்கு அப்பார்வை மிகக் கொடூரமானதாயும், அவருடைய சகவாசம் அதிக அருவருப்பானதாயும் இருந்தது.

—ஓ! மிகவும் ஒற்றுமையா யிருக்கின்றது. ஆனால் என்னிடமிருக்கும் புகைப்படத்தைவிட நீ அதிக அழகுட னிருக்கின்றாய்—என்று தயானந்தர் தொடர்ந்து மொழிந் தார்.

—தங்களுடைய பாராட்டுதலுக்கு வந்தனம்—என்று சரோஜினி அலட்சியமாகப் பதிலளித்தாள்.

தயானந்தர் இளஞ் சிரிப்புடன்,

—அம்மணி! ஆசாமி மாறாட்டத்தினால் உனக்கு நான் தீங்கிழைத்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன்—என்றார்.

—மறுபடியும் தங்கள் அன்பிற்கு வந்தனம். நான் போய்வருகின்றேன்—என்று சரோஜினி சரேலென்று அவ் விடத்தை விட்டப்பால் சென்றாள்.

—சரோஜினியின் அழகு தயானந்தரின் மனதைக் கவர எத்தனித்தது. அவளது இளமையின் புதுத்தன்மை யும், சரீரத்தின் மினுமினுப்பும் அவரைப் பரவசமாக்கின. ஆனால், "அவள் வாசுதேவனுடைய மனைவி" என்ற அச்சம் அவர் மனதில் உதித்தபோது அவர் ஆசை நாசமாயிற்று.

மதன கோபாலர் மாளிகையில் நடனமும், நாட்டிய மும், சங்கீத முழக்கமும் தடபுடலாயிருந்தன. பிரபுக்கள் உல்லாச உயர்வினால் உற்சாகமாகத் தங்கள் நண்பர்களுட னும், காதலிகளுடனும், சம்பாஷித்துக் கொண்டிருந்தார் கள். மாளிகை எங்கும் கூத்துக் களியாட்டமும், மும்மர மாக ஆனந்த கோஷம் கடல் முழக்கம்போல் ஒலித்தது. மதுபானப் பிரியர்களாகிய சில கனவான்கள் உயர்ந்த சிமைப் பானவர்க்கங்களை அளவு கடந்து பிரயோகம் செய்துகொண்டு, ஆனந்த மேலீட்டால், மேல் நாட்டு நாக ரீகத்தை யனுசரித்துத் தங்கள் மனதிற் கிசைந்து கை கொடுக்க உடன்பட்ட அழகிகளை யணைந்துகொண்டு இன் னிசைக்குப் பொருத்தமாக நிர்த்தனம் செய்தார்கள். "நாக ரீக முன்னேற்றத்தில் முன் அணியில் நிற்கும் பிரபுக்களின் விருந்து விழாக்களில் இதுகாறும் இந்நூதனக் களியாட்ட

கிர்த்தனம் கிரகப்பிரவேசம் செய்யவில்லை. இந்த மேல் நாட்டு நாகரீக வித்தையை முதன் முதல் சென்னை வாசிகளின் சமூகத்தில் பிரயோகித்து வெற்றியடைந்த பெருமையை மதனகோபாலர் அடைந்தமையால் அதிர்ஷ்டசாலியானுர் என்று பத்திரிகைகள் மதனகோபாலரைப் புகழ்ந்தன. இக்களியாட்டங்களெல்லாம் ஓர்புரம் நடந்து கொண்டிருக்கையில் சரோஜினியும், வாசுதேவனும் மற்ருேர் தனி இடத்திலமர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

சரோஜினி—தயானந்தப் பிரபு என்பவரே தன்னைப் பிடித்துக்கொண்டு போக எத்தனித்த மனிதன்—என்று அவரைச் சந்தித்த விருத்தாந்தங்களை விபரமாகக்கூறினுள்: இதைக் கேட்ட வாசுதேவன் அலட்சியமாக நகைத்துக் கொண்டே,

—சரோஜினி! அம்மனிதனுடைய வரலாறுகளை நான் நன்கறிவேன். இந்த நிமிஷத்தில் வேண்டுமானுலும் அவனைப் போலீஸ்காரரிடம் ஒப்புவித்து விடலாம். ஆனுல் அவன் தேடியலைந்த உன்போன்ற உருவமுள்ளவளாகிய அந்த நீலலோசனியைக் கண்டு பிடிக்கட்டுமென்றே அவனை சுயேச்சையாக விட்டிருக்கின்றேன்—என்று கூறினுன்.

வைபவங்களெல்லாம் முடிந்த பின் மதனகோபாலர் மாளிகைக்கு விஜயம் செய்திருந்த கனவான்கள் அவ்விடத்தை விட்டகன்ருர்கள்.

அத்தியாயம் 6.

பாரதமாதா சங்கம்—நீலலோசனியின் சதி.

வாசுதேவன் மாளிகையில் ஒரு ஏகாந்தமான இடத்தில் சரோஜினி தனிமையிலுட்கார்ந்து சன்னல் வழியாக சந்திர பிம்பத்தைப் பார்த்

துக் கொண்டே தன் பிற்கால வாழ்க்கையைப் பற்றி மனோராச்சியம் செய்துகொண்டிருந்தாள். அன்றிரவு மிகவும் மனோகரமாயிருந்தது. நிர்மலமான ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. காற்று மிருதுவாய் வீசிக்கொண்டிருந்தது. சரோஜினியின் எண்ணங்கள் வாசுதேவன் மீது சென்றன. பொய்யாக அவன் மனைவியாக நடிப்பது ஒருக்கால் உண்மையாக மாறிவிடக் கூடுமோ என்றும் கருதினாள். அவள் உள்ளத்தில் பலவிதமான எழுச்சிகள் உண்டாயின. காதல் என்ற நெருப்பு அப்பொழுதுதான் அவள் நெஞ்சில் மூட்டப்பட்டது. வாசுதேவன் மகா அற்புதமான அழகு வாய்ந்த யௌவன புருஷன். அவனது தேகம் சிவந்ததாகவும், பளபளப்பும, செழுமை பொருந்தியதாகவும், இயற்கையான காம்பீரமும், வசீகரமும் பெற்றதாகவும், இருபத்தி ஐந்து வயதளவினதாய் கண்ட பெண்கள் மோகிக்கத்தக்க சுந்திர வடிவத்துடனிருந்தது. விரிந்து பறந்த நெற்றியும், கருத்தடர்ந்த புருவவிற்களும், கிராப் செய்யப்பட்டு பளிங்கு போன்ற நெற்றியில் பாதிவரையில் சுருண்டு சுருண்டு அலங்கோலமாகத் தொங்கிக்கொண்டிருந்த மயிர்ச்சுருளும், அவனது அழகிற்கு அழகு செய்தன. நற்குணம், நல்லொழுக்கம், பெருந்தகைமை, கண்ணியம், பராக்கிரமம், தன்னடக்கம் முதலிய சகலமான சிறப்புகளும் அவன் முகத்திலேயே ஜொலித்ததுடன், இயற்கையாகவே அபாரஞானமும், சூட்சும புத்தியும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அழகிற் சிறந்த அவனது வடிவமும், மாதுரமான குணவொழுக்கங்களும், ஆனந்த மயமான சொற்சாதுர்யமும், அவனை நட்புகொள்பவர் மனதில் பசுமரத்தாணிபோல் பாய்ந்து அவர்களை அவன் வசமாக்கி இன்பக்கடலில் ஆழ்த்தின.

இத்தகைய மனோகரமான உன்னத தோற்றமும், ஆஜானுபாகுவான கட்டமைந்த மேனியும், திரண்டுருண்ட புஜங்களும், கருணை நிறம்பிய முக வசீகரமும், சரோஜினியின் மனதைக் கவர்ந்துவிடவே "பொய்யாக அவன் மனைவியாக நடித்ததை இனி உண்மையான சம்பவ

மாக மாற்றிக் கொண்டாலென்ன, என்ற ஒரு ஆசை அவளை யறியாமல் திடீரெனத் தோன்றிற்று.

"அச்சம்பவம் வாசுதேவனைக் கணவனாக அடைந்து இன்பம் நுகரக்கூடிய—அச்சம்பவம் மிக்க ருசிகரமான தாகவே இருக்கும்" என்றும கருதினாள். இத்தகைய மனோ உல்லாசத்தில் ஈடுபட்டிருக்கையில் வாசுதேவன் அவளருகாமையில் வந்து கொண்டிருந்தான். "சரோஜினி! எனது பிரியமுள்ள சரோஜினி!" என்ற வார்த்தைகள் அவள் செவியில் விழுந்தன. மயேந்திர ஜாலம்போல் திடீரென்று ஒரு பேராசை அவள் மனதிலெழும்பியது. இருதய கமலத்தில் வாசுதேவனுடைய உருவம கோயில் கொண்டிருந்த இரகசிய ஸ்தானத்தை மனக்கண்களால் உற்றுப்பார்த்தாள். தன்னை வெறிக்கப பார்க்கில் வாசுதேவ னுடைய இளகிய பெருத்த விழிகளை நிமிர்ந்து பார்க்க மாட்டாமல் வெட்கமும், சஞ்சலமும, நிறைந்தவளாக் கீழே குனிந்த வண்ணம் தனது கடைக் கண்களால் அவனது முகவிலாசத்தை மெல்ல நோக்கி அதை ஆராய்ந் தாள். அவளது இளகிய கண்களில் மிகவும் விலாசமான இருவிழிகளும் நீலமலர்களைப்போல் மிதநது கொண்டிருந் தன. அதுகாறும் காமபீரமும், ஆண்மையும் நிறைநது விளங்கிய அவனது தோற்றமும் இளக்கமும, உருக்கமும் காட்டி அவனது உள்ளம ஆசையே வடிவாய், அன்பே நிறைவாய்த் தத்தளிப்பதை வுள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதில் வெளியிட்டது ஒப்புயர்வற்ற வனப் பும் நிறைவும,உயரவும் நிறைந்த அவளது மார்பு விம்மி விம்மித் தணிந்து கொண்டிருந்த குறிகளினால் அவளது தேகம் சொல்ல முடியாத தாபத்தினால் தகிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிந்தது. "சரோஜினி" என்று வாசுதேவன் கூப் பிட்ட இனிமையான குரல் அவளது செவிகளில் கொள்ளை கொள்ளையாக வந்து மோதி, அவளது தேகத்தின் ஒவ்வோ ரணுவையும் பம்பரம்போல் சுழற்றியது அவளுக்கு இன்ப ஊற்றாக இருந்தது. தன்னை மறந்து வாசுதேவனுடைய

ஆர்வமுள்ள அணைப்பிற்கிடங் கொடுத்ததுடன், அன்பு நிறைந்த அவன் முத்தங்களைச் சந்தோஷமாக அவள் அதரங்களும் வரவேற்றுக் கொண்டன.

—சரோஜினி! இந்த வேடிக்கை விவாகம் உண்மையான விவாகமாக முடிந்தாலென்ன? நான் உன்னை விரும்புகிறேன். இவ்வுலகில் இதுவரையில் கண்டிராத பேரின்பத்தையடையச் செய்குவையோ? —என்றான் வாசுதேவன்.

—இது உண்மைதானோ? என்று சரோஜினி சந்தேகத்துடன் வினவினாள்.

வாசுதேவன் மறுபடியும் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அவ்விருவர் கண்களும் சந்தித்த காலத்திலேயே சரோஜினியின் மனதில் காதல் தீ கொழுந்துவிட்டு எரிய எத்தனித்து விட்டபடியால், அவனால் கட்டியணைக்கப் பட்ட காலத்தில் பேரானந்தமடைந்தாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

—கண்மணி! சரோஜினி! நாம் விவாகம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழலாமா?—என்றான் வாசுதேவன்.

சரோஜினிக்கும் வாசுதேவனுக்கும் விவாகம் ஏற்பாடாயிற்று. விவாக வைபவத்தை முன்னிட்டு சுதந்திரபவனம் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டது.

திருநெல்வேலியிலிருந்து சரோஜினியின் தாயாராகிய இரத்தினவல்லியம்மாள் சென்னை வந்து சேர்ந்தாள். சரோஜினி பரம வைதிகர்களான வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவள். வாசுதேவன் பட்டணம் முதலியார் குலம். இக்கலப்பு விவாகம் சரோஜினியின் உற்றார் உறவினர்களுக்குப் பிடிக்காததினால் அவர்களனைவரும் கட்டுப்பாடாக விவாகத்திற்கு வர மறுதளித்து விட்டார்கள். ஆயினும் இரத்தினவல்லி மட்டில் தன் மகளின் மனப்போக்கை யனுசரித்து நடக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சரோஜினி

யின் மனோபீஷ்டப்படி தன் இச்சையாக அவள் தேடிக் கொண்ட கணவனை மிக அன்புடன் அங்கிகரித்துக் கொண்டாள்.

விவாக வைபவத்தன்று வாசுதேவன் நண்பர்களாகிய பல சிமான்களும், சிமாட்டிகளும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். ஆடம்பரமான விருந்து நடைபெற்றது. இக் கலப்பு விவாகத்தைப் பலபத்திரிகள் புகழ்ந்துரைத்தன

அடுத்த வாரத்தில் ஓர் மாலை சரோஜினி சுதந்திர பவனத்தின் ரோஜாத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். ரோஜாத்தோட்டத்தில் பல வர்ண ரோஜா மலர்களும் பூத்திருந்தன. வெள்ளை, மஞ்சள், ஊதா, சிகப்பு முதலிய நானாவித வர்ணமலர்களில் சிகப்பு ரோஜா மலர்களே அதிக அழகாயிருந்தன. அந்த சிகப்பு ரோஜா மலரில் ஒன்றைக் கையில் பறித்தெடுத்துக்கொண்டு வாசுதேவன் சரோஜினியை நோக்கி வந்தான்.

—சரோஜினி! இம்மலரின் நிறமும் உன் அதரங்களின் நிறமும் ஒரே மாதிரியாயிருக்கின்றன.

என்று கூறிக்கொண்டே வாசுதேவன் அம்மலரை சட்டை பொத்தான் துவாரத்தில் சொருகிக்கொண்டான். சரோஜினி தலை குனிந்த வண்ணமாக நின்றாள். அவள் கன்னங்கள் அந்த ரோஜாமலரின் நிறத்தைவிட அதிகமாகச் சிவந்திருந்தன.

சரோஜினி! நான் இன்றையதினம் வெளியே போக வேண்டியிருக்கின்றது. அனேகமாக நாளையதினம்தான் திரும்புவேன்—என்றான் வாசுதேவன்.

—ஆ! நான் தங்களைப் பிரிந்து எப்படித் தனித்திருப்பேன்—என்றாள் சரோஜினி.

—அவசியமான வேலையில்லாமற் போனால் நான் உன்னைப் விட்டுப் போவேனா?

—எதற்காக நீங்கள் போகின்றீர்கள்?

வாசுதேவன் தலையை அசைத்தான்.

—நான் போகக்கூடிய காரியம் அதிக ரகசியமானது அதைப்பற்றிப் பின்னல் தெரிவிக்கின்றேன்.—

என்று வாசுதேவன் சரோஜினியைக் கட்டியணைந்து விடை பெற்றுக் கொண்டான்.

அன்று மாலை தயானந்தப் பிரபு பலேஸாட்டா ஒட்டலில் பிரவேசித்து ஒரு மேஜையின் எதிரில் உட்கார்ந்து சிற்றுண்டி யருந்திக்கொண்டே நடந்த விவகாரங்களைப்பற்றிப் பலவாறு ஆலோசிக்கலானர். சரோஜினியின் அழகின் மீது அவர் எண்ணங்கள் உலாவின. ஆனல் வாசுதேவனுடைய ஞாபகம் அடிக்கடி உதித்து அத்தகைய ஆசைக்குரிய எண்ணங்களைத் திடுக்கிடச் செய்தன. வேண்டியவற்றைப் புசித்துவிட்டு அவர் எழுந்துபோகுந் தருவாயில் மற்ளுேர் மேஜையின் எதிரில் அவர் மனதில் குடியேறி இருக்கும் சரோஜினி அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அறியாவலுடன் அந்த மேஜையை நோக்கிச் செல்லுமுன் தயானந்தர் தன் தப்பிதத்தை யுணர்ந்து கொண்டார். அப்பெண் சரோஜினியல்ல. இவர் வெகுகாலமாகத் தேடிக்கொண்டிருந்த நீலலோசனி. தயானந்தர் சாடையாகத் தன் சட்டைப் பையிலிருந்த புகைப்படத்தை எடுத்துப் பார்த்துச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டார்.

தயானந்தர் சரலேன்று அந்த மேஜையின் எதிரில் வந்து நின்று.

—அம்மணி! மாலை வந்தனம். நாம் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கின்றது—என்று கூறிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்த சுமார் ஒரு அங்குல நீளமுள்ள தந்தத்தினல் செய்த பாரதமாதா சிலை ஒன்றை எடுத்து மேஜையின் மீது போட்டார்.

அவள் திடுக்கிட்டுத் திகைத்துப்போய் பயத்துடன் மேஜையின்மீது கிடந்த பாரதமாதாவின் சிலையையும், தயானந்தரின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். தயானந்தர் சாவதானமாக அவள் எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

—அதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே? தாங்கள் யார்?—என்று வினவினாள் அப்பெண்மணி.

—அம்மணி! அதோ மேஜையின்மீது கிடக்கின்ற உருவச்சிலையாகிய நமது ரகசிய சங்கத்தின் அடையாளம் நம்மை அறிமுக மாக்கி வைக்கலாம். பாரதமாதாவின் தந்தச் சிலை அடையாளத்தை நீ மறந்து விட்டாயோ?—என்ற தயானந்தரின் கேள்வியினால் அப்பெண்மணியின் சரீரம் நடுங்கிற்று.

—தாங்கள் யார்?—என்று மறுபடியும் வினவினாள்.

—நானும் உங்களில் ஒருவன் என்பது விளங்கவில்லையா? இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டுமானால் நாம் சாவகாசமாகப் பேசிக்கொண்டால் எல்லாம் விளங்கும்—என்றார் தயானந்தர்.

அவள் தலை நிமிர்ந்து தயானந்தரை முறைக்கப் பார்த்தாள். அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுக மானவர்களைப்போல் பாவித்துக்கொண்டார்கள்.

—பெண்ணே! நாமிருவரும் ஒருவருக்கொருவர் இனி எவ்விஷயத்தையும் மறைப்பது பயன்படமாட்டாது. நான் பாரதமாதா சங்கத்தின் அங்கத்தினர்களில் ஒருவன். அச்சங்கத்தைச் சேர்ந்த பெண் ஒருவள் அச்சங்கததின் சார்பாக ஒரு மனிதனுடைய ரகசியத்தை யறிந்து வரும்படி அனுப்பப்பட்டாள். ஆனால் அவள் அந்த மனிதனிடமிருந்து பதினாயிரக்கணக்காக லஞ்சம் வாங்கிக்கொண்டு அவனைக் காட்டிக் கொடுக்காமல் மறைந்து கொண்டிருக்கின்றாள். அவளிறந்து போனதாகக் கதையும் கட்டிவிடப்பட்டிருக்கின்றது. சங்கத்தின் அங்கத்தினர்கள் அவளைத்

தேடிக்கொண்டு அலைகின்றார்கள். அவளுடைய துரோகத்திற்குச் சன்மானம் மரணம் என்பதையும் அவள் நன்கறிவள்—என்றார் தயானந்தர்.

—அப்பெண் புன்னகை செய்தாள்.

இக்கதை யெல்லாம் நானறிவேன். சங்கத்திற்குத் துரோகம் செய்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயங்கரமான தண்டனையைப் பற்றியும் எனக்குத் தெரியும். ஆனால் நான் ஒரு கண்மூடியல்ல என்பதைத் தாங்களும் தங்கள் சகோதரர்களும் அவசியம் அறிந்துகொள்ளவேண்டும்.நான் பாரதமாதா சங்கத்தாரால் கைப்பற்றப்பட்ட மறு நிமிஷத்திலேயே அச்சங்கத்தின் இருப்பிடத்தை அரசாங்கத்தார் அறிந்துகொள்ள நேரிடும். சாக்கிரதை—என்றாள்.

தயானந்தர் சிறிது தயங்கினார். சுற்றிலும் திரும்பிப் பார்த்துக் கொண்டார்.

—ஸ்! ஐயையோ! பகிரங்கமாக அந்தப்பெயரைச் சொல்லலாமா?—

அவள் பரிகசமாகச் சிறித்தாள்.

—சிநேகிதரே! நானும் நீங்களும் ஒரே வகையான ஆபத்தில் இருக்கின்றோம். இனி நாம் செய்யவேண்டியதென்ன ?

—நீலலோசனி மறுபடியும் நகைத்து

—இதற்கு முன் என்னைப் பற்றிய தகவல்கள் ஏதாவது கிடைத்தனவோ?—எனக் கேட்டாள்.

சரோஜினியைச் சந்திக்க நேரிட்ட வரலாறுகளை தயானந்தர் விவரமாக எடுத்துரைத்து,

—வாசுதேவன் என்டவனை நீ அறிவையோ?—என்று வினவினார்.

திருத்தப்பட்ட 7-வது பதிப்பு வெளி வந்துவிட்டது!

தமிழ் நாட்டில் இதுவரையில் முப்பதாயிரம் புத்தகங்கள் செலவாயிருக்கின்றன!

வீண்காலப் போக்கிற்காக ஏற்பட்ட வெறுங் கட்டுக்கதை யன்று!

ஸ்தல ஸ்தாபனம் என்ற பெயரால் முனிசிபல் சேர்மேன்கள், கௌன்ஸிலர்கள் போன்ற ஜனநாயகப் பிரதிநிதிகள் செய்கின்ற அக்கிரமங்களையும், பொதுஜன நிதியைப் பகல் கொள்ளை யடிக்கின்ற அநீத வழிகளை யும்— நீங்கள் அறிந்து கொள்ள ஆசைப்பட்டால்

தென்பாதி T. S. கனகசபை எழுதிய

ரெகுநாத சர்மா அல்லது மோசத்தால் வந்த நாசம்

என்னும் அதிசய நாவலை வாங்கி வாசித்துப் பாருங்கள்

அலங்கார நடை! ஆச்சர்ய சம்பவம்! அற்புதக் காட்சி!
அதிசய காதல்! விசித்திர கற்பனை! விநோத சூழ்ச்சி!
விஞ்ஞான தத்துவம்! ரஸாயன வித்தை! இனிய மொழி!

இவைகள் நிறைந்த இவ்வினிய நாவல் படிக்கப் படிக்கப் பிரமிப்பா யிருக்கும்.

முனிசிபல் வரி செலுத்தும் ஏழைகளும், செல்வந்தர்களும் தங்கள் வரிப்பணம் எவ்வளவு எளிதாக அபகரிக்கப்படுகின்றதென்பதை அறிவார்களா?

ரெகுநாத சர்மாவின் நண்பர் "சோறித்தவளை" சாஸ்திரி இவ்வித இழி செய்கைகளையும், விவேக சூழ்ச்சிகளையும், லோகோபகாரமாக மிகுந்த கருணையுடன் இப்புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். இவர் திறமைகளை படித்துப் பார்க்க தவறாதீர்கள்.

3 வித சித்திர கலர் படத்துடன் கூடியது. விலை அ. 6

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

இதற்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்—என்று நீலலோசனி ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

—உன்னைப் போலவே இருக்கும் அப்பெண் வாசுதேவனுடைய மனைவி. அவன் ஒருபயங்கரமான மனிதன் என்பதும் அதனால் நமக்கும் நமது சங்கத்திற்கும் துன்டம் நேரிடக்கூடு மென்பதும் நானறிவேன்—என்றார் தயானந்தர்.

நீலலோசனி இதைக்கேட்டு நகைத்துக்கொண்டே—வாசுதேவன் தற்சமயம் அப்பெண்ணுடன் இந்நகரத்திலிருக்கின்றான் என்கின்றீர்கள். அவனால் நமக்கும் நமது சங்கத்திற்கும் இடையூறு ஏற்படக்கூடுமென்றும் சொல்கின்றீர்கள்—என்றாள்.

—தயானந்தர் தலையை அசைத்துக்கொண்டே—வாசுதேவனை நீயறிவையோ?—என்று கேட்டார்.

—ஓ! அம்மனிதனை முற்றிலும் நான் அறிவதுடன் அவனை மிகுதியும் வெறுக்கின்றேன். தாங்கள் அவனை பயங்கரமான மனிதன் என்று கூறினீர்கள். அவன் ரகசியம் என்னிடம் சிக்கிக் கொண்டிருக்கின்றது. வாசுதேவனை அவனுடைய மனைவியினிடமிருந்து பிரித்துவிட என்னால் முடியும்—என்றாள் நீலலோசனி.

தயானந்தருடைய முகத்தில் நகை எழும்பியது தன் மனதில் குடிகொண்டிருக்கும் சரோஜினியை வாசுதேவனிடமிருந்து இவளால் பிரித்துவிட முடியும் என்ற வார்த்தைகள் அவர் காதுகளில் விழுந்த மாத்திரத்தில் அவர் சந்தோஷ சாகரத்தி லமிழ்ந்தினர்.

—அப்படியானால் பாரத மாதா சங்கத்திற்கு உன்னைக் காட்டிக் கொடுக்காமல் நீ தப்பித்துக் கொள்ளும்படி விட்டு விடுவதுடன், உனக்கு ஏராளமான சன்மானமும் கொடுக்கின்றேன்—என்றார் தயானந்தர்.

இந்த ஒப்பந்தத்தை நீலலோசனி ஏற்றுக் கொண்

டாள். இருவரும் அப்போசனச்சாலையை விட்டுப் புறப் பட்டார்கள்.

* * * *

வாசுதேவனை விட்டுத் தனித்திருப்பது சரோஜினிக்கு மிக்க மனவருத்தமாயிருந்தது. இத்தகையை மனக் கலக்கத்துடன் வாசுதேவனுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டு சுதந்திர பவனத்தின் உப்பரிகையில் உட்கார்ந்திருக்கையில் அவளுடைய வேலைக்காரி வந்து யாரோ ஒரு பெண் வாசுதேவனைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறினாள்

வாசுதேவனை அவள் பார்க்க வரவேண்டிய காரணமென்னவென சரோஜினி ஆலோசித்துக் கொண்டிருக்கையில்—முகமூடி யிட்டுக்கொண்டிருந்த நல்ல வனப்புள்ள அவ்வனிதை—மன்னிக்கவும். அவசரமாக நான் வாசுதேவனைப் பார்க்கவேண்டி யிருக்கின்றது. ஆதலால் நான்—என்று கூறிக்கொண்டே மெத்தையின்மேல் பிரவேசித்தாள்.

அனுமதியை எதிர் பாராமலே அவ்வாறு உப்பரிகையின் மீது பிரவேசித்த அணங்கை சரோஜினி உற்றுப் பார்த்து—

—என் புருஷனைப் பார்க்கவேண்டுமோ ?—என்று அலட்சியமாக வினவினாள்.

—வாசுதேவரை நான் பார்க்கவேண்டும்—என்றாள் அப்பெண்.

சரோஜினி அந்நகையைக் கவனித்த வரையில் அவளுக்கு ஒருவிதமான திகில் ஏற்பட்டது. தன் சாயலைப் போல் அவளிருப்பதைக் கண்டு திகைத்து.

—நீலலோசனி என்ற பெண் நீதானோ?—என்று வினவினாள்.

—ஆம்! என்று அவள் தலையை அசைத்துக் கொண்டே—வாசுதேவன் இதுகாறும் என்னைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வில்லையோ?—என்று கேட்டாள்.

—உன் தாத்பர்யம் என்ன? என் கணவன் எதற்காக உன்னைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டும்—என்று சரோஜினி வியப்புடன் உசாவினள்.

—ஓ!—என்று அலட்சியமாக நகைத்துக்கொண்டே.

—நான் சென்னைக்கு வந்திருப்பதை அறிந்தால் வாசுதேவன் தலை மறைந்து கொள்ளும்படியாயிருக்கும். நான் இவ்வூரை விட்டுப் போகிற வரையில் அவரைக் காண்பதரிது—என்றாள் நீலலோசனி.

—நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே? எதற்காக என் கணவன் உன்னைக் கண்டு மறைந்து கொள்ளவேண்டும்? உனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்—என்று சரோஜினி கோபத்துடன் கேட்டாள்.

—நீ விரும்புகிறபடியால் நான் உண்மையை உரைக்கின்றேன். நான் வாசுதேவருடைய மனைவி!—என்றாள் நீலலோசனி.

அத்தியாயம் 7

சரோஜினி-நீலலோசனி-ஒருகத்திக்கு இரு உறையா?

இவ்விடம் வந்து என் இந்த அபாண்டமான பொய்யை உரைக்கின்றாய்? நீ எப்படி அவருடைய மனைவியாக இருக்கமுடியும்-என்று கோபத்துடன் சரோஜினி கேட்டாள். அவள் கண்கள் கோபத்தீயால் ஜொலித்தன.

—இதோ பார்—என்று நீலலோசனி ஒரு பத்திரத்தை எடுத்துக் காட்டினாள்.

—சுமார் நான்கு வருடங்களுக்கு முன் பாரிஸ் நகரத்தில் நீலலோசனிக்கும், வாசுதேவனுக்கும் நடைபெற்ற விவாக உடன்படிக்கையை சரோஜினி படித்துப் பார்த்து.

—இதை நான் நம்பவே மாட்டேன். இது பொய் உடன் படிக்கை—என்றாள்.

—சகோதரி! உன்மீது எனக்குப் பகையா? தற்செயலாக உண்மை தானாகவே வெளியாய் விட்டது. இந்த உடன் படிக்கையில் வாசுதேவருடைய கையெழுத்தை நன்றாய் கவனித்துப் பார். எனக்கும் வாசுதேவருக்கும் விவாகமான சில மாதங்களில் மனவருத்த மேற்பட்டு நாங்கள் பிரிந்து விட்டோம். பின்னர் நான் இவ்வுலக முற்றிலும் சஞ்சாரம் செய்திருக்கின்றேன். என்னைப்பற்றி வாசுதேவர் பின்பு கேள்விப் படாததால் ஒருக்கால் நான் இறந்துவிட்டதாக நினைத்து உன்னிடம் தெரிவிக்காமலிருந்திருக்கலாம்—என்றாள் நீலலோசனி.

சரோஜினி அவ்விவாக உடன் படிக்கையைக் கவனித்துப் பார்த்து அதில் இருப்பது தன் கணவனாகிய வாசுதேவனுடைய கையெழுத்துதான் என்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டாள்.

சரோஜினியின் மனதில் பழய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உதிக்கலாயின. முதல் முதல் சுந்திரபவனத்திற் கெதிரில் வாசுதேவன் நின்று தன்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தும், பின்னர் சிற்றுண்டிச்சாலையிலும் தன்னை மிகக் கூர்மையாய் கவனித்தும், தன்னை அடையாள மறிந்துக் கொள்வதற்குத்தான் என்ற சந்தேகம் தோன்றியது.

பின்னர் தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்ற அன்னியனாகிய அவன் எதற்காகத் தன் உயிரையும் பொருள்படுத்தாமல் தலையிட்டுக் கொள்ள வேண்டும். அதன் பின் வாசுதேவன், சரோஜினி தன் மனைவி யென்று சிறிதுகாலம் நடித்திருக்கின்றாள். இத்தியாதி காரணங்களால் நீலலோசனிக்கும், வாசுதேவனுக்கும் ஏற்கனவே விவாகம் நடந்திருக்

கின்றதென்பதற்குப் போதுமான அத்தாட்சி ஏற்பட்டு விட்டது—என்று பலவாறு சரோஜினி மனக்குழப்பமடைந்தாள்.

—சகோதரி! வாசுதேவன் அறிவில்லாதவர். நீ அவர் மனதைக் கவர்ந்த காரணத்தை நான் அறிந்துகொண்டேன். என்மீது அவர் அடங்காக் காதல் கொண்டிருந்தார். நான் அவரைப் பிரிந்ததிலிருந்து பெண்களென்றால் அவருக்கு மிக்க அருவருப்பாக இருந்ததாகவும் பிரஸ்தாபம். உன்னைச் சந்தித்தபோது நாமிருவரும் ஒரே மாதிரியாக இருந்தமையால் உன்மீது ஆசைப்பட்டு விட்டார் போலும்—என்றாள் நீலலோசனி.

—நான் கேவலமாக ஏமாற்றப் பட்டதையறிந்துகொண்டேன். இனி என் கதி என்னவாகின்றது—என்று சரோஜினி கவலையுடன் உசாவினாள்.

—சகோதரி!உன்மீது எனக்கு அனுதாபம் உண்டாகின்றது. நீ இனி வாசுதேவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. உடனே புறப்பட்டு உன் பெற்றோர்களிருப்பிடம் சென்றுவிடு. இச்சென்னை நகரிலிலேயே இருக்க வேண்டாம். வாசுதேவனை மறந்துவிடு. வாசுதேவனைப் பற்றியும் உன் வாழ்நாளில் இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டனவென்பதையும் இனி நினைத்து வருந்துவதில் யாது பலன்? தான் தோன்றியதாகத் திரியப் புறப்பட்ட உன் போன்ற பெண்களுக்கு இது நல்ல கற்பனையாகும். உன் பெற்றோர்களிடம் போய்ச்சேர்—என்றாள் நீலலோசனி.

இந்தப் பரிகாசமான வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சரோஜினி வெறுப்பும், கோபமுமடைந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து.

"உண்மையை அறிந்துகொண்டேன். இனி என்னை எக்காலத்திலும் பார்க்க முடியாது. தங்கள் அன்பிற்கு வந்தனம்.—சரோஜினி"

என்று எழுதி மேஜையின்மீது எறிந்து விட்டு மனதி லடக்க முடியாத வருத்தத்துடன் அவ்வீட்டை விட்டு வெளி யேறினாள்.

அதி சீக்கிரத்தில் திறந்து விடப்பட்ட காதலின் ஆனந்த மாளிகை சரோஜினிக்கு அதி சீக்கிரத்திலேயே மூடப்பட்டுப் போயிற்று. அவள் ஏமாற்றமடைந்தாள். உலகமெல்லாம் அவள் கண்ணுக்குப் பயங்கரமான இருள் மயமாயிருந்தது. அத்தகைய இருளில் சஞ்சலத்துடன் சரோஜினி நடக்கலானாள்.

சிறிது தூரம் சென்றவுடன் கருப்பு உடை தரித்த இருவர் தாவிப் பாய்ந்துசரோஜினியைக் கைப்பற்றினார்கள் சரோஜினி சந்தடி செய்ய எத்தனிக்குமுன் பலமான கையி னால் அவள் வாய் கெட்டியாக மூடப்பட்டது. அப்படியே மூர்ச்சையானாள்.

கண் விழித்துப் பார்க்கையில் சரோஜினி ஒரு ஏகாந் தமான அறையில் ஸோபாவின்மீது படுத்துக்கொண் டிருப்பதாக அறிந்தாள். அவ்வறையில் விலை உயர்ந்த விசித்ரமான மேஜை நாற்காலிகளும் வெல்வெட் சோபாக் களும் போடப்பட்டிருந்தன. சுவர்களில் நேர்த்தியான பெரிய நிலைக்கண்ணாடிகளும், அழகான படங்களும் மாட் டப்பட்டிருந்தன. ஜன்னல்களில் பட்டுத் திரைகள் தொங் கின. தரையில் ரத்தினக் கம்மளம் விரிக்கப்பட்டிருந்தது. மேஜையின் மீது சித்திர வேலைப்பாடமைந்த பூந்தொட்டி யில் பலவர்ணப் பூக்கள் சொருகப்பட்டிருந்தன. அந்த அறையின் ஆடம்பரத்தைப் பார்த்தால் ஒரு பெரிய கோடீ ஸ்வரனுடைய வாசஸ்தலம் என்று எளிதில் புலனாகும். சரோஜினி மெதுவாய் எழுந்து ஜன்னல்வழியாக வெளியே பார்த்தாள். ஒரு ஆற்றங் கரையின் அருகாமையிலிருந்த மரங்களடர்ந்த பூஞ்சோலையில் அமைக்கப் பட்டிருக்கும் அம்மாளிகையின் பெருமையும் சுற்றிலுமிருந்த காட்சி களின் நேர்மையும், அவளுக்கு அதியமாக இருந்தன.

"இந்த மாளிகை யாருடையது?" என்று அவள் ஆலோசிக்கையில் அறையின் கதவு திறக்கப்படும் சந்தடியைக் கேட்டுத் திடுக்கிட்டு உள்ளே நுழைந்து கொண்டிருக்கும் மனிதனை அச்சத்துடன் நோக்கினள். சரோஜினியால் மிகுதியும் வெறுக்கப்பட்ட தயானந்தப் பிரபு உற்சாகத்துடன் உள்ளே நுழைந்து சாவதானமாக ஒரு சோபாவில் உட்கார்ந்து.

—ஆ! இங்கு எப்படி வந்தாய்?—என்று வினவினர்

—நான் நீலலோசனியல்ல! மறுபடிம் ஏன் தவறுதலாக என்னைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கின்றீர்கள்?—என்று கூறிக்கொண்டே சரோஜினி வெளியேபோக எத்தனித்தாள். தாயனந்தர் வழி மறித்துக்கொண்டு,

—உன்னுடைய துர்ப்பாக்கியமான நிலையையும், வாசுதேவனல் ஏமாற்றப்பட்டவிபரமும்,நான் அறிந்துகொண்டு உனக்கு உதவி செய்யலாமென்றே உன்னை இங்கு கொண்டு வரும்படி ஏற்பாடு செய்தேன்—என்ருர்.

—நான் உடனே வெளியே போகவேண்டும்—என்று சரோஜினி கடுமையாகக் கேட்டுக் கொண்டாள்.

—உடனே தயானந்தர் அந்த அறையின் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு சன்னலின் எதிராக வந்துநின்று

—நீ இவ்விடத்தை விட்டுப் போகமுடியாது—என்று கண்டிப்பாய்க் கூறினர்.

—எதற்காக என்னை பந்தோபஸ்து செய்யவேண்டும்? நான் நீலலோசனியல்லவே—என்ருள் சரோஜினி.

—அவளைப் பற்றி இனி எனக்கு அக்கரையில்லை. அவள் தான் வாசுதேவனின் உண்மையான மனைவி ஆனல் அகஸ்மாத்தாய் நான் நீலலோசனியாக உன்னைத் தவறுதலாக எண்ணிய காலத்தில் பார்த்ததிலிருந்து என் எண்ணமெல்லாம் உன்னிடம் குடியேறி விட்டன. நீலலோசனியைக் கைப்பற்ற வேண்டுமென்ற கவலையை உன்னுல் ஒழித்து

விட்டேன். உன்மீது கொண்ட ஆசையினுல் நான்கொண்ட கொள்கைக்கும் துரோகம் செய்திருக்கின்றேன். ஆதலால் நீ எனக்கே உரியவள்—என்ருர் தயானந்தர்.

சரோஜினியின் முகம் வெளுத்தது. அச்சத்தினுல் அவள் உடல் நடுங்கிற்று.

—சரோஜினி! இன்று தற்செயலாக நான் வெகுகால மாகத் தேடியலைந்து கொண்டிருந்த நீலலோசனியைச் சந் தித்தேன். அவள் வாசுதேவனுடைய மனைவியென்று ஏற் பட்டதினுல் நீ அவன் மனைவி என்பது பொய்—என்று தயானந்தர் மீண்டும் மொழிந்து கொண்டே கதவைத் திறந்துகொண்டு சரோஜினியின் எதிரில் வந்து மறுபடியும் உட்கார்ந்தார்.

மீள முடியாத ஆபத்தில் தான் சிக்கிக் கொண்டிருப் பதை நினைத்து சரோஜினி துக்கித்தாள்.

—சரோஜினி! அதன் பின்புதான் நான் உனக்கு உப காரம் செய்யத் தீர்மானித்து வஞ்சகனுகிய வாசுதேவனை விட்டு உன்னைப் பிரித்தேன். நீ என்னை விவாகம் செய்து கொள். புதுவை நகரில் எனக்குத் திரண்ட செல்வ மிருக் கின்றது, நாமிருவரும் சந்தோஷமாய் வாழலாம்—என்ருர் தயானந்தர்.

—உனக்குப் பயித்தியமா?—என்று சரோஜினி ஆத்திர மாகக் கேட்டாள்.

—அழகியே! நான் உன்னைக் காதலிக்கின்றேன்.—
என்ருர் தயானந்தர்.

ஆனுல் நான் உன்னை வெறுக்கின்றேனே? அதற் கென்ன செய்வது?—என்ருள் சரோஜினி.

தயானந்தர் பரிகாசமாக நகைத்துக்கொண்டே சரோ ஜினியைக் கட்டியணைய எத்தனித்தார். கோபாவேசத்துடன் சரோஜினி திமிறிக்கொண்டு மேஜையின் மீதிருந்த ஒரு கத்தியைக் கைப்பற்றி,

காண்டாமிருகமே! என் அருகில் நெருங்கினுல் உன் உயிரை இழப்பாய். சாக்கிரதை—என்ருள்.

கத்தியை ஓங்கிக்கொண்டு காம்பீரமாக சரோஜினி நின்ற காட்சி தயானந்தரைத் திடுக்கிடச் செய்தது.

—சரோஜினி! இனி ஆலோசிப்பதில் பயனில்லே. என் நண்பர்களுக்கு நான் துரோகம் செய்துவிட்டதை அவர்கள் எப்படியோ அறிந்துகொண்டார்கள். என்னைப் பிடிப்பதற்காக பாரத மாதா சங்கத்திலிருந்து எத்தனையோபேர் புறப்பட்டு விட்டார்கள். அவர்கள் தேசமெங்கும் சுற்றித் திரிந்துகொண்டிருக்கின்ருர்கள். நீலலோசனி என்ற தப்பு அபிப்பிராயத்தில் உன்னையும் அவர்கள் பிடித்துக்கொள்வார்கள். அவ்வாறு அவர்களிடம் சிக்கிக்கொண்டால் மிகப் பயங்கரமான மரணத்தை யடைய வேண்டும். ஆதலால் நாம் தப்பித்துக்கொண்டு எப்படியாவது புதுவை நகருக்குச் சென்றுவிட்டால் உயிர் பிழைத்துக் கொள்ளலாம். நீ வெளியேறினுல் கண்டிப்பாய் அவர்களிடம் சிக்கிக்கொள்வாய்—என்ருர் தயானந்தர்.

இதைக் கேட்டு சரோஜினி நடுங்கினுள். இவ்வாறு இவன் கையில் சிக்கிக்கொள்வதைவிட உயிர் துறப்பதே நலமென முதலில் அவள் கருதியபோதிலும், தந்திரமாக தயானந்தரை ஏமாற்றிவிட்டு வெளியேறி நல்லது கெட்டதுகளை யறிந்து கொள்ளவேண்டுமெனத் தீர்மானித்துத் தயானந்தருக்கு உடன்பட்டவள்போல் நடித்து மறுதினமே அவருடன் புதுவைக்குப் பிரயாணப்படுவதாக ஒப்புக்கொண்டாள்.

தயானந்தர் சந்தோஷமாக அவ்விடத்தை விட்டகன்ருர். சரோஜினி மனக் கிலேசத்துடன் சோபாவில் படுத்தாள். வாசுதேவன் உருவம் அவள் கண்களுக்குப் புலனுயிற்று. மறுபடியும் நான் என் காதலனைச் சந்திக்க முடியுமா? என்று நினைத்தாள். பலவிதமான தீமைகட்கு உடன்பட்டு அவள் மனச்சோர்வடைந் திருந்தபடியால் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

நடு நிசியில் படீர் படீர் என வெடி சத்தம் கேட்டது சரோஜினி திடுக்கிட் டெழுந்து சன்னல் கதவைத் திறந்து பார்த்தாள். அன்றிரவு முன்னேரத்தில் மூடிக்கொண் டிருந்த காரிருள் திடீரென மறைந்து கோடி சூரியப் பிரகாசம்போன்ற ஒரு ஒளி ஆகாயத்திலிருந்து பிரகாசித்தது. இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக சரோஜினி அறையை விட்டு உப்பரிகையின் வெளித் தளத்தில் வந்து நின்ருள். மாளிகையைச் சுற்றி மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்த ஆகாய விமானத்திலுள்ள பிரகாசமான மின்சார விளக்கிலிருந்து ஜோதி மயமான அப்பேரொளி வீசிற்று.

கருப்பு உடையும், முக மூடியும் அணிந்து கொண்டிருந்த பல பயங்கரமான மனிதர்கள் அந்த மாளிகையைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் துப்பாக்கிகளிருந்தன.

இங்ஙிலையில் கருப்பு உடையணிந்தமனிதர்களில் நால்வர் தளத்தில் திகைத்து நடுநடுங்கி நின்றுகொண்டிருந்த சரோஜினியைப் பிடித்துத் தூக்கினர்கள். சரோஜினி அறிவிழந்தாள். ஆற்றில் தயாராக நின்று கொண்டிருந்த மோட்டார் படகில் சரோஜினி ஏற்றப் பட்டவுடன், அப் படகு அதிவேகமாய்ச் சென்றது.

அத்தியாயம் 8.

நீலலோசனி—சிக்கிக்கொண்டாள்.

சரோஜினியால் மேஜையின்மீது எரியப்பட்ட துண்டுக் கடிதத்தை வாசுதேவன் பார்த்தான். சரோஜினி போய்விட்டாள்! அவன் உயிரை விட மேலானதாக மதித்திருந்த சரோஜினி அவனைவிட்டுப்

பிரிந்து விட்டாள். அதற்குக் காரண மென்ன? கடிதத்தில் கண்டபடி அவள் எந்த உண்மையை அறிந்துகொண்டாள்.

சரோஜினியிடம் தன் ரகசியங்களை வெளியிடாமல் ஒளித்து வைத்ததைப் பற்றி வாசுதேவன் வருந்தினன். சரோஜினியின் அழகிற் சிறந்த தோற்றம் அவன் கண்முன் நின்றது.

அந்தோ! பரிதாபம்! விவாகம் ஆன சொற்ப தினங் களில் காதலியைப் பிரிய நேரிட்ட துன்பத்தை எங்ஙனம் சகித்துக்கொள்ள முடியும்? அவன் என்னுதநும் என்ணி என்ணி எங்கினன். தவித்தான். இனி எங்கு காண்பேன் என வருந்தினன். அறிவாளிகளின் அந்தக்கரணங்களையும் தம் வயத்தாக்கித் தட்டழியச் செய்யும் தன்மையுடைய ஒரு யுவதியின் ஆசையை மறப்ப தெங்ஙனம்? பெண்ணுசை யால் இன்பத்தையடையப் பெற்றவர், அதனுலாகிய துன் பத்தினையும் அடைவது அனுபவ மென்னலாம். ஆழ்ந்து பார்க்குமிடத்து அஃதும் அவன் அனுபவித்த இன்பத் தோடு ஒத்திருந்தாலன்றோ ஒப்பத்தக்கதாகும். அந்தோ! இன்பத்திலும் இத்துன்பம் எத்தனைபோ மடங்கு பெரிதா யிருக்கின்றது.

சரோஜினியின் அழகிற்சிறந்த தோற்றம் அவன்மனக் கண்களில் புலனுயிற்று. அன்று பூத்த புது மலர் போன்ற மிருதுவான மேனியும், மடந்தைப் பருவத்தின் புதுத்தன் மையினுல் தளதளப்புடன் கட்டமைந்திருக்கும் அவயவங் களின் மழமழப்பும், காண்போர் மனதைக் கவுளிகரஞ் செய்யத்தக்க முக விலாசமும், கருணுரசம் ஒழுகும் கடைக் கண் பார்வையும், சாமுத்திரிகா லட்சணத்திற்கு ஒரு சிறி தும் குறைவு படாமல் பாதாதிகேச பரியந்தம் அமைந்த அழகமைப்பும், கண்ணுரக்கண்டு களித்து, அனுபவித்து இணையிலா இன்பம் நுகர்ந்து, தன் ஆன்மா பேரானந்த மடையும வரையில் காதலை ருசி பார்த்த வாசுதேவன் தன் காதலியைவிட்டு எங்ஙனம் தனித்திருப்பான்? இன்பத்தின் எல்லையை அடைந்த அவன், துர் அதிர்ஷ்ட வசமாகத் துன் பக் கடலில் ஆழ்ந்து கரை காணுமல் தவிக்கலானுன்.

உடனே தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு சரோஜினி எப்பொழுது வீட்டைவிட்டுப் போனாளென்று வினவினான்.

சரோஜினியைப் போன்ற தோற்றமுள்ள ஒரு பெண் வாசுதேவனைத் தேடிக்கொண்டு வந்ததாயும் உப்பரிகையின் மீது ஏறிச் சென்று சரோஜினியிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்ததாயும், அதன் பின்னரே சரோஜினி வீட்டை விட்டு வெளிப்பட்டதாயும், சரோஜினி வெளியேறியபின் அப்பெண் வேறு வழியாகச்சென்று விட்டதாயும் தெரிந்தது. வாசுதேவன் தனக்கு நேரிட்ட சங்கடத்தை ஒருவாறு யூகித்துக் கொண்டு இவ்வாறு தன்னைத் தேடிவந்தவள் நீலலோசனியே என்பதைத் திட்டமாக அறிந்தான். இக்கொடிய செய்கையால்—அதாவது சரோஜினியைத் தன்னைவிட்டுப் பிரியச்செய்த இக்கொடிய செய்கையால் நீலலோசனி தன் பழியைத் தீர்த்துக் கொண்டாளென்று நினைத்த மாத்திரத்தில் வாசுதேவனுக்கு அடங்காக்கோப மூண்டது. தன் பற்களை நறநற வெனக் கடித்துக் கொண்டான்.

—ஓ! நாம் அப்போதே அவளைக் கைதி செய்யாமல் விட்டது கேடாய் சம்பவித்து விட்டது—என்று தன்னைத்தானே நொந்துகொண்டு சரோஜினி தனிமையாகச் சென்றாளோ? அல்லது நீலலோசனி அவளைக் கொண்டுபோய் வேறு யாதாமொரு விபத்தில் சிக்கவைத்து விட்டாளோ—என்றும் வாசுதேவன் அச்சங் கொண்டான்.

இந்நிலையில் அன்றிராப்போது கழிந்தது. மறுநாட் காலை தபாலில் வாசுதேவனுக்கு ஒரு கடிதம் வந்தது. மிக்க ஆத்திரத்துடன் அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான். என தன்புள்ள,—

தாங்கள் எனக்குச்செய்த துரோகத்திற்குப் பிரதியுபகாரம் செய்யஎனக்குத் தருந்தசமயம் வாய்க்காமற்போகாது என்று நான் சபதம் செய்ததை தயவுசெய்து ஞாபக மூட்டுகின்றேன். பழிக்குப்பழி தீர்க்கவேண்டிய அச் சந்தர்ப்பம் கிடைத்தது ஆதை மிக ஆவலுடன் வரவேற்றுக் கொண்

டேன். தங்கள் காதலியை இனி எக்காலத்திலும் பார்க்க முடியாது. அவள் வேறு வசதியான இடம் தேடிக்கொண்டாள். தயவுசெய்து மன்னிக்கவும்—நீலலோசனி.

இக்கடிதத்தில் கடைசியாக எழுதப் பட்டிருக்கும் அபாண்டத்தை வாசுதேவன் எப்படி நம்புவான்? சரோஜினி நீலலோசனியின் வலையில் சிக்கிக்கொண்டாளென்று அறிந்த பின் வாசுதேவனுடைய மூளை கலங்கிற்று புத்தி தடுமாறியது. பயித்தியம் பிடித்தவன் போலானான்.

வாசுதேவன் நீலலோசனியைக் கண்டுபிடித்து அவளிடமிருந்து உண்மையைக் கிரகிக்க வேண்டும். ஆனால் நீலலோசனியைக் காண்பதெங்ஙனம்?

சரோஜினியை, சூழ்ச்சியால் வாசுதேவனைப் பிரிந்து போகும்படி ஏற்பாடு செய்துவிட்டு நீலலோசனி வாசுதேவன் மாளிகையை விட்டுப் புறப்பட்டாள். மெதுவாக நடந்தாள். மனதில் ஏதோ ஒரு சந்தேகம் உதிப்பதற்காஸ்பதமாக திகைத்து நின்று நின்று பின்புறம் திரும்பிப்பார்த்தாள். தன்னை யாராவது பின்பற்றி வருகின்றார்களோ என்று அவள் தயங்கித் தயங்கி அடிக்கடி சந்தேகம் தெளிந்துகொண்டாள் போலும். அவளைக் கண்ணோட்டமிட்டுக்கொண்டே இருவர் பின்பற்றி வருவதை பேதையாகிய அவள் அறிவாளோ? மற்றோர்பால் பின்னும் இருவரும் அவளைத் தொடர்ந்தார்கள்.

நீலலோசனி வேகமாக நடந்து சென்றுகொண்டிருக்கையில் திடீரென இருவர் அவள்மீது பாய்ந்து அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு.

—தேவியே! கடைசியாகச் சிக்கிக்கொண்டாய். இனி எங்களை மீற ஆலோசிக்காதே. சங்கத்தின் கட்டளைகட்குக் கீழ்ப்படிவாயாக. தப்பித்துக் கொள்ள முயன்றால் என் நண்பன் கையிலிருக்கும் பீச்சாங் குழலிலுள்ள அக்கினித் திராவகம் உன் அழகைப்பங்கப்படுத்திவிடும். ஏதாவது நீ சந்தடி செய்ய எத்தனித்தாலும் நாமெல்லோருக்கும் அரசாங்க ஆக்கினை கிடைக்கும். ஆதலால் அமைதியாக எங்களைப்

பின்பற்றுவாயா?—என்று கேட்டான் அவர்களில் ஒருவன்.

—ஓ! உங்கள் சங்கமும் நீங்களும் நாசமாய்ப் போகட்டும். என் தலை போனாலும் உங்களை நான் காட்டிக்கொடுப்பதென்றே தீர்மானித்து விட்டேன் என்று நீலலோசனி தைரியமாகக் கூறினாள்.

—நீலலோசனி! உனக்கு இன்னும் முடிவு ஏற்பட்டுப் போகவில்லை. உண்மையை வெளியிட்டு விட்டு உயிர் தப்பித்துக்கொள்ளலாம். நாற்காலியில் உட்கார ஆசைப்படுகின்றாயோ?—என்றான் அம்மனிதன்.

நீலலோசனியின் உடல் நடுங்கிற்று. மெய் சிலிர்த்தது. பயப்பிராந்தி கொண்டாள். அவள் சிந்தை தடுமாறியது. புத்தி கலங்கித் தைரியம் குறைந்தது. மௌனமாக அவர்களைப் பின்பற்றினாள்.

சிறிது தூரம் சென்றவுடன் திடீரென மற்றிருவர் தோன்றி இவர்களைத் தாக்கினார்கள். இவர்களுக்குள் பிரமாதமான சச்சரவு நிகழ்ந்தது. இந்த சந்தர்ப்பத்தில் நீலலோசனி அக்கினித் திராவகப் பீச்சாங்குழலை அபகரித்து அதிலிருந்த திராவகத்தைத் தன்னை முன்னால் கைப்பற்றிய இருவர்மீதும் பிரயோகம் செய்தாள். அக்கினித் திராவகத்தின் அனல் பட்ட மாத்திரத்தில் அவர்கள் "ஆ! கொலைகாரி! சண்டாளி!" என்று வாய்விட்டுக்கூவி ஓலமிட்டு அலறினார்கள். அக்கினித் திராவகம் மார்பிலும் முகத்திலும் விழுந்து பற்றிக்கொண்டு அகோரமாக எரியவே, அந்த மரண வேதனையைச் சிறிதும் சகிக்கமாட்டாமல் அவர்களிருவரும் அலங்கோலமாகக் கீழே விழுந்து மிகப் பரிதாபகரமாகப் பதறிக் கதறித் துடிதுடித்துப் புரண்டார்கள்.

இச்சந்தடியைக் கேட்டு இன்னும் பலர் மெல்ல அவ்விடம் கூடினார்கள். இக்குழப்பத்தில் நீலலோசனி ஓட்டமெடுத்தாள். இதைப் பார்த்து ஒரு ஆசாமி அவளைப் பின்பற்றினான். சிறிதுதூரம் சென்றதும் நீலலோசனி ஒரு காகிதச் சுருளை எடுத்து எறிந்தாள். பின்பற்றியவன் அதைக் குனிந்து எடுக்கையில் அவள் மாயமாக மறைந்துவிட்டாள்.

காகிதச் சுருளை எடுத்தவன் அப்பெண்ணின் தீரத்தை வியந்துகொண்டு அதியாவனுடன் அதைப் பிரித்துப் பார்த்தான். அது ஒரு நகர அமைப்பின் சித்திரப் படமாயிருந்தது. (Town Plan.)

அத்தியாயம் 9.

மின்சார நாற்காலி—மரணம் நிச்சயம்.

சரோஜினி கண் விழித்துப் பார்த்தபோது அதிக அலங்காரமான ஒரு அறையிலுள்ள சோபாவின் மீது சாய்ந்து கொண்டிருப்பதாக அறிந்தாள். அந்த அறையின் சுவர்களும், அடித்தளமும் சலவைக் கற்களால் அமைக்கப் பட்டிருந்தன. பிரகாசமான மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தான் எவ்விடத்தி லிருப்பதாக சரோஜினியால் அறிந்துகொள்ள முடியவில்லை. தயானந்தர் மாளிகையைச் சுற்றி ஒரு ஆகாய விமானம் வட்டமிட்டதும், கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய வெளிச்சம் நல்லிருளில் ஒளி வீசியதும், தன்னைக் கைப்பற்றிக்கொண்டு வந்து மோட்டார் படகில் ஏற்றியதும், ஒன்றன்பின் ஒன்ருக அவள் ஞாபகத்தில் உதித்தன. தப்பமுடியாத ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டதாக எண்ணி ஏங்கினாள். நீலலோசனி என்று தவறுதலாகக் கருதிக்கொண்டு தன்னைப் பலர் கைப்பற்றச் செய்த சூழ்ச்சிகளும், கருப்பு உடைதரித்த அப்பயங்கர மனிதர்களின் தோற்றமும், நினைத்த மாத்திரத்தில் அவளை நடுங்கும்படி செய்தன.

"தயானந்தரின் கெதி என்னவாயிற்று? அவருடைய மாளிகை முற்றுகை யிடப்பட்ட காலத்தில் அவர் தப்பிக் கொண்டாரா? இக்கேள்விகளுக்கு சரோஜினியால் எங்ஙனம் பதிலறிந்து கொள்ள முடியும்? எழுந்து நின்று ...ன்னல்

வழியாகப் பார்த்தாள். நாற்புறமும் ஜலப் பிரதேசத்தால் சூழப்பட்ட ஒரு கற்பாறையின் மீது கட்டப் பட்டிருந்த ஒரு கட்டிடத்தில் தானிருப்பதாக அறிந்து கொண்டாள். கருங்கடலில் பிர்மாண்டமான அலைகள் கற்பாறையின் மீது மோதின. கடலின் மத்தியிலுள்ள ஒரு நிர்மனுஷ்யமான தீவிற்குத் தன்னைக் கொண்டு வந்து விட்டதாக நினைத்துப் பயந்தாள். அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே ஒருவன் பிரவேசித்தான்.

—தயானந்தர் எங்கே? நான் எவ்விடத்தி லிருக்கின்றேன்? தயவு செய்து பதிலளிக்க முடியுமா?—என்று சரோஜினி ஆவலுடன் கேட்டாள்.

அம்மனிதன் கொல்லென நகைத்து,

—அம்மணி! தாங்கள் எதிர் பார்ப்பதை விட மிகச் சமீபத்தில் தங்கள் நண்பரைப் பார்க்கலாம். அதற்கிடையில் சங்கத்தாருக்குத் தங்களிடம் சொற்ப வேலை யிருக்கின்றது. அந்த வேலை நீண்ட காலமாகப் பாக்கியா யிருப்பது. வெகு பேருக்குத் தொல்லையா யிருந்தது—என்றான்.

—எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே? எந்த சங்கம்!—என்று சரோஜினி அதிசயத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

மீண்டும் அவன் கலகலவென நகைத்து—இன்னுஞ் சிறிது நேரத்தில் அச்சங்கத்தாரனைவரும் தங்களை—நீலலோசனியாகிய தங்களை அன்புடன் வரவேற்க எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பாரதமாதா சங்கத்தார் வெகு காலமாகத் தங்களைப் பிரிந்திருந்த நீலோசனி தேவியை மறுபடியும் சந்திக்க ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்—என்றான்.

சரோஜினியின் முகம் சோர்ந்தது. "நீலலோசனியை இன்னும் பலர் தேடிக் கொண்டிருக்கின்றார்களென்றும், அவர்களிடம் சிக்கிக் கொண்டால் மரணம் நிச்சயம்" என்றும் தயானந்தர் எச்சரித்தது அப்போது அவள் ஞாபகத்திற்கு வந்தது.

—நான் நீலலோசனியன்று, ஆள் மாராட்டத்தால் நீங்கில் என்னை நீலலோசனி என்று கருதுவது தப்பிதம்—என்ருள்.

—அந்த வியாக்கியான மெல்லாம் சங்கத்தார் சபையில் தெரிவித்துக் கொள்ளலாம். ஆனல் இங்கு இனி ஒருவரையும் ஏமாற்றிவிட முடியாது—என்று கண்டிப்பாய் கூறினன்.

—தயானந்தர் எங்கே? என் உண்மையை அவர் அறிவார். அவரால் உங்கள் தப்பிதத்தைத் தெரிந்து கொள்ளலாம்—என்ருள் சரோஜினி.

—தன் குற்றங்களை வெளியிட்டு வாக்குவாதம் செய்யக் கூடிய சந்தர்ப்பம் தயானந்தருக்குக் கொடுக்கப்படவில்லை. சங்கத்திற்குத் துரோகம் செய்த மற்ற நண்பர்களுக்குக் கிடைத்த சன்மானம் அவருக்கும் கிடைத்துவிட்டது. அவரைப் பின்பற்ற வேண்டுமென்று ஆசைப் படுகின்றீர்களா?—

சரோஜினி மிகப் பயங்கரமாக அலறினள்.

—அந்தோ! அந்தோ! ஆனல் தயானந்தர் இறந்து விட்டாரோ? என் உண்மையை இனி யார் விளங்க வைப்பார்கள்!—என்று சரோஜினி கூறி முடிக்கு முன் சரேலென்று அவ்வறையின் கதவு சாத்தப்பட்டது.

பாரத மாதா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாராயிருந்தபோதிலும் தன்னை ஆள் மாராட்டமாக கைப்பற்றியதற்கு அவர்களே காரணகர்த்தரென்றும், தன் காதலனைப் பிரித்ததற்கும் அவர்களே ஆஸ்பதமென்றும், பலவாறு சரோஜினி எண்ணமிட்டாள்.

சிறிது நேரம் கழிந்ததும் அதே மனிதன் வந்து கதவைத் திறந்து சரோஜினியை அழைத்துச் சென்ருன். இவர்களிருவரும் ஒரு விசாலமான கூடத்தை யடைந்தார்கள். அக்கூடத்தில் கருப்பு உடை தரித்த பலர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சற்று உயரமான மேடையின் மீது போடப்பட்டிருந்த மற்ருெர் ஆசனத்தில் தலைமை ஸ்தா

னத்தில் ஒருவர் வீற்றிருந்தார். அம்மண்டபத்தின் மத்தியில் ஒரு சலவைக்கல் மேடையின் மீது பாரதமாதாவின் வெண்கலச் சிலையொன்று நிறுத்தப்பட்டிருந்தது.

சரோஜினி அச்சபையின்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள்.

—நீலலோசனி தேவியே! உன் வரவு நல்லவரவாகட்டும் ஆறு மாத காலமாக எங்கேமறைந்து கொண்டாய்? உனக்கு சங்கத்தாரால் இடப்பட்ட ஆக்ஞையாகிய அந்த மனிதனுடையரகசியத்தை யறியவேண்டுமென்றவேலையென்னவாயிற்று? அந்த சமாசாரங்களை உடனே அறிவித்துவிட்டாய் உனக்கு மன்னிப்பு கிடைக்கலாம்—என்றார் தலைவர்.

பாரத மாதா சங்கம் என்பது ஒரு ரகசியக் கூட்டம் என்பதையும், கொள்ளையோ அல்லது ராஜத்ரோகமோ அக் கூட்டத்தாரின் நோக்கம் என்பதையும், அப்பொழுது தான் சரோஜினி அறியலானாள்.

—நான் நீலலோசனி யல்ல! வாசுதேவர் என்ற பிரசித்தி பெற்ற பிரபுவின் மனைவி. நான் ஆங்கிலேய அரசாங்கப் பிரஜைகளில் ஒருவள். எனக்கு எதாவது ஆபத்து எற்பட்டால் அரசாங்க ஆக்கினை உங்களைச் சும்மா விடாது—என்று சரோஜினி காம்பீரமாகக் கூறினாள்.

—இந்தக்கதையைவிட வேறுஎதாவது ஒரு கதைகட்டிவிட்டிருந்தால் வேடிக்கையா யிருக்கும். ஆங்கிலேய அரசாங்கப் பிரஜையா யிருந்தால் எங்களுக்குப் பயமா? ஆங்கில அரசாங்கத்திற்கும் எங்களுக்கும்எவ்வித சம்பந்தமும் இல்லை. உண்மையைச் சொன்னால் உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். உனக்கு ஐந்து நிமிஷங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள் உண்மையை வெளியிட்டு விட்டால் உயிர் பிச்சை யளிக்கப்படும்—என்றார் தலைவர்.

உடனே சரோஜினியின் எதிரில் ஒரு நாற்காலி கொண்டு வந்து போடப் பட்டது. அதில் அவளை வற்புறுத்தி உட்காரவைத்தார்கள். அந்த நாற்காலியின் பின்

சாய்மானத்தில் வளையம் வளையமாகத் தொகுக்கப்பட்ட செப்புக் கம்பிகள் பளப்பளப்புடன் அமைந்திருந்தது. அவற்றிலிருந்து இரு செப்புக் கம்பிகள் புறப்பட்டு உக்கிரமான மின்சார சக்தியுடனிணைக்கப் பட்டிருந்தது.

—இதை ஆலோசித்து முடிவு சொல்வதற்காக ஐந்து நிமிஷங்கள் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதோ உன் நண்பர் தயானந்தரின் கெதியைப் பார்—என்று தலைவர் கூறுகையில் சரோஜினியின் எதிரிலிருந்த ஒரு திரை விலக அதேமாதிரியான மற்றோர் நாற்காலியிற் தயானந்தர் அலங்கோலமாகக் கிடந்தார். உயிரிழக்குந் தருணத்தில் பரிதாபகரமாக அவர் அவயவங்களை உதறிக் கொண்டிருக்க வேண்டுமென்பதை அவர் கிடந்த கோரமான காட்சியிலிருந்து சரோஜினி அறிந்துக்கொண்டாள். இதைப் பார்த்த மாத்திரத்தில் சரோஜினி நடுங்கி பெரு மூச்செறிந்து,

—என்னை அநீதமாகக் கொன்று விடாதீர்கள். நான் நீங்கள் கருதுகின்றபடி நீலலோசனி யன்று. உங்கள் சங்கத்தின் நிபந்தனைகளையாவது ரகசியங்களையாவது நானறியேன். நான் நிச்சயமாக வாசுதேவரின் மனைவி—என்றாள்.

—வாசுதேவனுடைய மனைவி என்பதையும் நாங்களறிவோம். உனக்கும் அவனுக்கும் விவாகமாகி ஐந்து வருடங்களாகின்றன. ஆனால் விவாகமான சில மாதங்களில் உங்கள் விவாகம் ரத்து செய்யப்பட்டுப் போனதும் எங்களுக்குத் தெரியும்—என்று தலைவர் கூறினர்.

அப்படியானால் வாசுதேவன் தனக்குத் துரோகம் செய்ததாக எண்ணியது பிசகு என்று சரோஜினி கவலைப்பட்டாள். இனிச் செய்வதென்ன மரணத்தின் எல்லையில் அவளிருக்கின்றாள்.

—என்னை விடுவித்து விடுங்கள்! விடுவித்து விடுங்கள்! நான் நிரபராதி— என்று சரோஜினி பரிதாபகரமாக மன்றாடினள்.

எங்கும் நிசப்தமாயிருந்தது. அந்த நிசப்தத்திற் கிடையில்,

—இன்னும் மூன்றரை நிமிஷங்கள்தா னிருக்கின் றன— என்ற பயங்கரமான தொனி எழுந்தது,

சரோஜினியின் உதடுகள் அசைந்தன, ஆனுல் அவ ளால் பேசுதற் கியலவில்லை. மரணத்தின் மௌனம் அவள் வாயை அடைத்து விட்டது.

—இரண்டே-நி-மி-ஷ-ங்-க-ள்,—

—தலைவர் தன் அருகாமையில் மேஜையின் மேலிருந்த மின்சார விசையைத் திருக எத்தனிக்கையில்—விர் என ஒருகுண்டு அவர் கையில் பாய்ந்தது. எங்கும் ஒரே குழப்ப மாக மூண்டது. கண்ணுடி சன்னல்கள் உடைக்கப்பட்டன. டம் டம் என்று வெடிசத்தம் கிளம்பிற்று. இக்குழப்பத்தில்,

ஆ! சரோஜினி நான் காண்பது கனவோ? அன்று நினைவோ? அன்று உண்மையான தோற்றமோ?— என்ற இனிமையான குரல் சரோஜினியின் காதுகளில் விழுந்தது,

—ஆ! எனதன்பரே!—என்று சரோஜினி வாசுதேவ னைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

அவள் சரீரமெல்லாம் கிடு கிடென நடுங்கிற்று. மெய் சிலிர்த்தது. ஆவி சோர்ந்து தன் நிலை யிழந்தாள்.

அத்தியாயம்—10

ஆகாயவிமான யாத்திரை—மர்மங்கள் வெளியாதல்.

சரோஜினி கண் விழித்துப் பார்த்தாள். விர் என்று குளிர் காற்று அவள் முகத்தில் உக்கிரமாய் வீசிற்று. படுத்திருந்தவள் எழுந்து நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். எங்கு பார்த்தாலும் ஒரே வெட்ட வெளியா யிருந்தது. சற்று நிதானித்த அளவில் ஆகாய விமானத்தில் தான் பிரயாணம் செய்வதாக அறிந்து கொண்டாள். வாசுதேவன் ஆகாய விமானத்தை இயங்க வைத்துக் கொண்டிருந்தான். காக்கி உடுப்பணிந்திருந்த இன்னும் நால்வர் விமானத்தி லிருந்தார்கள்.

சரோஜினி விழித்துக் கொண்டவுடன் வாசுதேவன் விமானம் ஓட்டும் வேலையை வேறொருவனிடம் ஒப்புவித்து விட்டு சரோஜினியின் அருகாமையில் வந்து உட்கார்ந்து புன்னகை செய்தான்.

—சரோஜினி! நல்ல காலமாக நீ உயிர் தப்பினாய். ஒரு கண்ணிமைக்கும் நேரம் தவறி இருந்தால் கண்டிப்பாய் அம் மின்சார நாற்காலிக்கு இரையாயிருப்பாய். எப்படி அவர்களிடம் அகப்பட்டாய்—என்று வாசுதேவன் விசாரித்தான்.

நீலலோசனியைச் சந்தித்தது முதல் நடந்தவற்றை சரோஜினி விபரமாகத் தெரிவித்தாள். அதைக்கேட்டு வாசுதேவன் வருத்த மடைந்து,

சரோஜினி! உன்னை நான் இழந்திருப்பேன். மகா கொடியவர்களாகிய பாரதமாதா சங்கத்தார் சிறிதளவேனும் இரக்கமின்றி மின்சார சக்தியினால் எத்தனையோ உயிரைக் கொள்ளை கொண்டிருக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் நான் சிறிது அசட்டையாக உன்னிடம் ஒரு ரகசியத்தை மறைத்ததே காரணம்; முன்னதாகவே நீ அந்த ரகசியத்தை யறிந்து கொண்டிருந்தால் பழிகாரியாகிய நீல

லோசனியின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டிருக்க மாட்டாய் —என்ருன வாசுதேவன்.

—ஆனல் நீலலோசனி கூறியது உண்மைதானே?— என்று சரோஜினி ஆத்திரத்தோடு ஒரு வினு நிகழ்த்தினள்.

ஆம்; நீலலோசனி என் மனைவி என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். சில வருஷங்களுக்கு முன் அயல் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது பாரிஸ் (Paris) நகரில் நான் ஒருவருஷம் வரையில் தங்கியிருந்தேன். அச்சமயம் நீலலோசனியும் அவ்விடத்திலிருந்தாள். அவள் அங்கு தனிமையாக இருக்கவேண்டிய காரணமென்ன என்பதை அறிந்து கொள்ளவும், அயல் நாட்டில் ஒரு இந்துவைச் சந்திக்க நேரிட்ட அவாவினுலும், ஒரு தினம் நான் அவளிடம் வலுவில் சென்று அறிமுகம் செய்து கொண்டேன்.

அவளுடைய வரலாற்றை விசாரித்ததில் புதுவை நகரில் ஒரு பிரபல செல்வந்தரின் புத்திரி என்றும், பாரிஸ் நகரத்தின் மேன்மையைப் பார்வையிடுதற்காக அவள் வந்ததாகவும் தெரிவித்தாள். அது முதல் நாங்களிருவரும் அடிக்கடி நடன மண்டபங்களிலும் நாடக சாலைகளிலும் சந்திப்பதுண்டு. நாளடைவில் எங்கள் சிநேகம் முற்றி அன்பாகப் பரிணமித்துக் கடைசியாகக் காதலாக மாறியது. அதிகங் கூறுவதேன். பாரிஸ் நகர வழக்கப்படி நாங்கள் உடன்படிக்கை மூலியமாக எங்கள் விவாகத்தைப் பதிவு செயதுகொண்டு அன்று முதல் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்,

சில மாதங்கள் கழிந்தன. பாரிஸ் நகரில் எந்த இந்தியனைக் கண்டாலும் நீலலோசனி தலை மறைத்து கொள்வாள். இந்தியர்கள் கூட்டமாகச் சேரக்கூடிய இடங்களுக்கு வர உடன்படமாட்டாள். அவள் மனதில் உற்சாகமேயில்லை. திகிலும் அச்சமும் சதா அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தன என்பதை நான் அறிந்து கொண்டேன்.

அவளிடம் ஏதோ ஒரு ரகசிய மிருக்கின்றதென்று நான் சந்தேகித்து அவளது மனோ அமைதி யின்மைக்குக் காரணம் என்ன என்று விசாரித்தேன். சரியான பதில் சொல்லவில்லை.

ஓர் தினம் நானும் அவளும் ஒரு நாடகசாலைக்குச் சென்றிருந்தோம். அவ்விடம் நாங்கள் உட்கார்ந்திருந்த பெட்டிக்கருகாமையில் மற்றோர் பெட்டியில் கருப்பு உடை தரித்த ஒரு இந்தியன் உட்கார்ந்திருந்தான். அவன் நீலலோசனியை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். இவ்வாறு அன்னியன் ஒருவன் என் மனைவியைப் பார்ப்பது. எனக்கு மானக் கேடாகவும், ஆத்திரமாகவு மிருந்தது. அழகிய பெண்களை ஆடம்பரமான ஆடையாபரண அலங்கார கோலத்தில் நாடக சாலைக்கு அழைத்துச் செல்லுதல் முட்டாள்தனமென்று அச்சமயம் புத்தியில் பட்டது.

அந்த இந்தியன் கடைசியாக மனத் துணிவுடன் நீலலோசனியின் அருகாமையில் வந்து அவளுக்கு வந்தனம் செய்து ஒரு பெயர் குறிப்புச் சீட்டையும் (Visiting card) ஒரு சிறு அட்டைப் பெட்டியையும் கொடுத்தான். இச்சம்பவங்களை எல்லாம் வியப்புடன் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். நீலலோசனி அந்த அட்டைப் பெட்டியைத் திறந்தவுடன் திடுக்கிட்டாள். அவள் முகத்தில் பலவித மான மாறுதல்களேற்பட்டன.

மனதிலடக்க முடியாத கோபத்துடன் நான் அப்பெட்டியை எடுத்துப் பார்த்தேன். அப்பெட்டிக்குள் தங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு சிறிய பாரதமாதா விக்கிரகம் இருந்தது. அந்த பெயர் குறிப்புச் சீட்டை எடுத்துப் பார்த்தேன்.

பாரதமாதா சங்கத்தின் பிரதிநிதி—இந்தியா.

என்றிருந்தது. நான் இவ்விஷயங்களில் என் கவனத்தைச் செலுத்தி யிருக்கையில், அம்மனிதன் எங்கேயோ மறைந்துவிட்டான், நாற்புறமும் திரும்பித் திரும்பிப்பார்த்தேன். நாடகசாலையிலேயே அந்த ஆசாமி காணப்படவில்லை.

கூடுமான வரையில் என் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியுட னிருந்து நாடகம் முடிந்ததும் வீடு வந்து சேர்ந்தேன்.

நீலலோசனி மனக் கலக்கத்துடனிருந்தாள். அவள் அந்தரங்கத்தை யறிந்து கொள்ள ஆசைப்பட்டுக் கூடுமான வரையில் விசாரித்தேன். உண்மையை வெளியிட மறு தளித்து விட்டாள். நயமாகவும், பயமுறுத்தியும் கேட் டேன். அந்த நிமிஷமே அவளை விலக்கி விடுவதாகவும் கூறினேன். ஒன்றிற்கும் அவள் கலங்கவில்லை. எனக்குப் பலவிதமான சந்தேகங்கள் உதித்தன. பாரதமாதா சங்கம் என்ற பெயர், தந்த விக்கிரகத்தின் அடையாளம், இவை களிலிருந்து அச்சங்கம், ஒரு கொள்ளைக் கூட்டமாகவோ, அல்லது இராஜத் துரோகக் கூட்டமாகவோ, தலை மறை வாயிருக்கும் ஒரு அந்தரங்க சபையா யிருக்கவேண்டு மென்று யூகித்துக் கொண்டேன். நீலலோசனியிடம் உடனே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று.

மறுதினமே அவளுடைய விவாகத்தை ரத்து செய்து அவளிஷ்டப்படி நடந்துகொள்ளும்படி யனுமதி கொடுத்து விட்டேன். அச்சமயம் என்னை எந்த சமயத்திலாவது பழி தீர்ப்பதாக அவள் சபதம் செய்துகொண்டு போனாள். அதன்பின் அவளைப் பற்றி நான் சிந்தித்ததே கிடையாது. பாரிஸிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றேன். அவ்வி டத்தில் பாரத மாதா சங்கத்தைப் பற்றிய சில தகவல்கள் எனக்குக் கிடைத்தன. அதிலிருந்து நான் திடுக்கிட்டு அச்சங்கத்தைச் சேர்ந்தவளாகிய நீலலோசனியை விட்டு நான் விலகியது நற்காலம் என்று சந்தோஷப்பட்டேன்.

கடைசியாக சென்னையில் முதன் முதல் உன்னைப் பார்த்தபோது நீலலோசனி என்றே சந்தேகித்துத் திகைத் துப்போனேன். அந்த உண்மையை நிதானித்தறிந்து தெளிந்து கொள்வதற்காகவே சிற்றுண்டிச்சாலை வரையில் உன்னைப் பின் பற்றினேன். என் சந்தேகம் தெளிந்தது. இயற்கைப் பிறவியில் ஒரே ரூபமாக இருவர் ஏற்பட்டிருக் கும் விசித்திரத்தைப்பற்றி எனக்கு அதிசயமா யிருந்தது.

நீலலோசனி பாரதமாதா சங்கத்திற்கு ஏதோ துரோகம் செய்து விட்டதாகத் தெரிகின்றது. அவள் மறைந்து விட்டாள். அவளால் எங்கே தங்கள் ரகசியம் வெளிப்பட்டு விடப்போகின்றதோ எனப்பயந்து அச்சங்கத்தைச்சேர்ந்தவர்கள் அவளைத் தேடியலைந்து கொண்டிருந்தார்கள். நான் முதலில் உன்னை நீலலோசனி என்று தப்பிதமாக மதித்தது போல் அவர்களும் நினைத்துக்கொண்டு உன்னைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்தார்கள்—என்று வாசுதேவன் விபரமாகக் கூறி முடித்தான்.

—தங்கள் முதல் மனைவி நீலலோசனியின் கதி என்ன வாயிற்று—என்று சரோஜினி பரிகாசமாகக் கேட்டாள்.

—சாகஸக்காரியாகிய நீலலோசனி மாயமாக மறைந்து விட்டாள். இனி அவளைப் பாரதமாதா சங்கத்தார் தேட மாட்டார்கள். அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தாரின் விருந்தாளிகளாகச் செல்வதற்குத் தயாரா யிருக்கின்றார்கள். இனிமேல் உன்னையும நீலலோசனி என்று ஒருவரும் பிடிக்க வரமாட்டார்கள். நீ பயப்படவேண்டாம—என்று வாசுதேவன் நகைத்துக்கொண்டே அலட்சியமாகப் பதிலளித்துவிட்டு சரோஜினியின் தோள் மீது கையைப் போட்டு அணைந்த வண்ணமாகத் தோகைமயிலே! இச்சம்பவங்களெல்லாம் ஏற்படாமற் போனால் உன்னுடன் இந்த ஆகாயவிமான யாத்திரையும், ஒரு ரகசிய கூட்டத்தைக் கண்டு பிடித்த உலகப் பிரசித்தியும எனக்கு எங்ஙனம் சித்திக்கும்—என்றான்.

—தங்களுக்கும் இச்சம்பவங்களுக்கும் என்ன சம்பந்தம்—என்று சரோஜினி வினவினாள்.

—சரோஜினி! இதுகாறும் உன்னிடம நான் தெரிவிக்கவே இல்லை. நான் ரகசியபோலிஸ் பிரதம அதிகாரி பாரதமாதா சங்கம் என்பது ஒரு ராஜத்துரோகக் கொள்ளைக்கூட்டம். அதில் செல்வாக்குள்ள பலர் சேர்ந்திருக்கிறார்கள். அச்சங்கம் உலகமெங்கும் வியாபித்திருக்கின்றது. அதன் தலைமை ஸ்தானம் கடலின் மத்தியில் ஒரு ஜனசஞ்சாரமற்ற ஏகாந்தமான தீவில் அமைக்கப் பட்டிருக்கின்றது. சங்

கத்திற்குத் துரோகம் செய்தவர்களை மின்சாரநாற்காலியில் உட்காரவைத்துக் கொன்றுவிட வேண்டுமென்பது சங்கத்தின்ஏற்பாடு.நீலலோசனியின் சூழ்ச்சியால் சங்கத்தின் அங்கத்தினர்களின் ஒருவரான தயானந்தரிடம் நீ அகப்பட்டுக் கொண்டாய். தயானந்தர் சங்கத்தாருக்குத் துரோகமாக நீலலோசனி எனக் கருதப்பட்ட உன்னைத் தன் வசப்படுத்திக்கொண்டு மறைந்து போக உத்தேசித்திருந்தது ஒற்றர்களால் பாரதமாதா சங்கத் தலைவருக்கு அறிவிக்கப் பட்டதினால் உடனே அவர்கள் உங்களிருவரையும் கைப்பற்றித் தீவிற்குக் கொண்டுபோய் விட்டார்கள்—என்றான் வாசுதேவன்.

—அந்த பயங்கரமான இடத்தை எப்படிக்கண்டு பிடித்தீர்கள்?—என்று சரோஜினி ஆச்சர்யத்துடன் உசாவினாள்.

—அந்த விஷயம் எனக்கு அதியத்தின் மேலதிசயமாகவும், சம்சயத்தின்மேல் சம்சயமாகவும் இருக்கின்றது. எனக்கு நூதனமாக மற்றோர் சந்தேகமுமஉற்பவித்து விட்டது. எதையும் நிதானிக்க முடியவில்லை. நீலலோசனி பாரதமாதா சங்கத்தைச் சேர்ந்தவ ளென்றறிந்தவுடன் அவளைக் கண்டுபிடிக்குமாறு நான் தீர்மானித்துக் கொண்டேன்.தயானந்தர் முதலியவர்கள் உன்னைப்பலாத்காரமாக பிடித்துக்கொண்டுபோக எத்தனித்த காலத்தில் நான்அவர்களைக் கைது செய்யாமல் விட்டதற்குக் காரணம் நீலலோனியை அவர்களும் அக்கறையாகத் தேடிக் கண்டு பிடிக்கட்டு மென்பதேயாகும். கடைசியாக நீலலோசனி கைப்பட்ட சமயம் குழப்ப மேற்பட்ட சந்தர்ப்பத்தில் அக்கினித் திராவகத்தைப் பீச்சி விட்டு ஓட்ட மெடுத்தபோது அவளைப் பின்பற்றிச் சென்ற ரகசிய போலீஸ் ஜவானுக்கெதிரில் ஒரு நகரச் சித்திரப் படத்தை எடுத்து எறிந்து விட்டு மாயமாக மறைந்து போனாள்· அந்தப் பிளானில் பாரத மாதா சங்கத்தின் தலைமை ஸ்தானத்தின் இருப்பிடமும்,அதன் காரியதரிசிகளி லொருவராகிய தயானந்தரின் இருப்பிடமும்,மற்ற விபரங்களும் மிகநேர்மையாகக் குறிப்

மிடப் பட்டிருந்தன. அதன் பின்புறத்தில் சங்கத்தின் வரலாறுகளும், நிபந்தனைகளும் எழுதப்பட்டிருந்தன.

நீலலோசனியைப் பின்பற்றிச் சென்ற ரகசிய போலீஸ் படையினரால் இப்படம் என்னிடம் சேர்ப்பிக்கப் பட்டது. நான் இப்படத்தைப் பார்த்து அதிசயித் திருக்கையில் டெலிபோன் மூலம் சரோஜினி தயானந்தர் மாளிகையிலிருப்பதாக ஒரு அனுமதேயச் செய்திவந்தது. நான் உடனே ஆகாய விமானத்திலேறிச் சென்று இரவில் பரிசோதனை விளக்கின் உதவியால் தயானந்தர் மாளிகையைக் கண்டு பிடித்த சமயம், அங்கு ஏற்கனவே பாரத மாதா சங்கத்தார் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் உன்னையும், தயானந்தரையும் கைப்பற்றி மோட்டார் படகில் தலைமை ஸ்தாபனத்திற்குக் கொண்டு போகின்ற வரையில் அறிந்துகொண்டு, தக்க உதவியுடன் அவ்விடத்திற்கு வந்து உன்னைக் காப்பாற்றினேன்—என்றான் வாசுதேவன்.

—இனியாவது இந்த போலீஸ் உத்தியோகத்தைவிட்டு என்னுடனிருக்க அவகாசம் ஏற்படுத்திக் கொள்வீர்களா—என்று புன்சிரிப்புடன் கேட்டாள் சரோஜினி.

—இன்றே நான் அந்த வேலையை ராஜீநாமா செய்துவிட்டு இனி சதா உன்னுடனிருப்பேன். உலகத்தில் காதலின் மாட்சிமை உன்னாலேயே நானறிந்தேன். ஆதலால் அனுவசியமாக உன்னை எதற்காகப் பிரிந்திருக்கவேண்டும். உத்தியோகம் காலப்போக்கின் நிமித்தமாகவேயன்றி அதனால் சம்பாதிக்கவேண்டுமென்கிற ஆசையில்லை—என்றுகூறி வாசுதேவன் சரோஜினியைக் கட்டியணைந்தான். கனிவாய முகம் பெற்றான்.

அத்தியாயம் 11.

சந்தோஷ வாழ்க்கை—நீலலோசனி கலாசாலை

வாசுவேதவனும் சரோஜினியும் அதிக சந்தோஷமாக சுதந்திர பவனத்தில் வாழ்ந்திருந்தார்கள். பாரதமாதா சங்கம் அரசாங்கத்தாரால் கைப்பற்றப்பட்டு அதைச்சேர்ந்த சதியோசனைக் கூட்டத்தாரில் அனேகர் ராஜ தண்டனை யடைந்தார்கள். ரகசிய போலீஸ் நிபுணராகிய வாசுதேவனுடைய சாமர்த்தியத்தை மெச்சி அரசாங்கத்தார் அவனுக்கு ஸர் பட்டம் கொடுத்தார்கள்.

சரோஜினியின் தாயாராகிய இரத்தினவல்லி தன் மகளைப் பார்ப்பதற்காகச் சென்னை வந்தவுடன், அவளுக்கு ஏற்பட்ட துன்பங்களை யெல்லாம் கேள்விப்பட்டு அவள் வருந்தியதுடன், அவள் மனதில் ஒரு சந்தேகம் உற்பவித்தது. பழய சமபவங்கள் ஒவ்வொன்ருக அவள் ஞாபகத்திற்கு வந்தன. இங்கிலேயில் சரோஜினிக்குத் தபாலில் ஒரு கடிதம் வந்தது.

என் பிரியமுள்ள சகோதரி,—

நான் உன்னைச் சகோதரி என்று அழைப்பது பொய் யல்ல. வெறும் உபசார வார்த்தையுமல்ல. உண்மையில் நாமிருவரும் ஒரு தாய் வயிற்றில் ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர்கள் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. அப்படி ஏதாவது சந்தேக மேற்பட்டாலும் அதை நிவர்த்தி செய்து உண்மையை யறிந்துகொள்ள வேண்டியது உன் வேலை. நான் ஓராண்டு குழந்தையாயிருக்கும்போதே என் பெற்ருேர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டு பின்பு புதுவைமா நகரிலுள்ள நீலகண்டர் என்ற பிரபுவினுல் ஆதரிக்கப்பட்டு அவரது அபிமான புத்திரியாக வளர்ந்தேன். அவரே பாரதமாதா சங்கத்தை முதன் முதல் ஸ்தாபித்தவர். அவரது

அளவற்ற செல்வம் அந்த சங்க நிர்வாகத்திற்கே அர்ப்பணமாயிற்று. கடைசியாக அவர் இறங்குந்தருவாயில் என் மர்மத்தை என்னிடம் தெரித்து என்னைக் களவாடிய காலத்தில் என் கழுத்திலணிந்திருந்த ஒரு தங்கப் பதக்கத்தையும் என்னிடம் கொடுத்து உன் பெற்றோர்களைக் கண்டுபிடிப்பதற்கு அது உபகாரமாயிருக்குமென்றும் கூறினர். அப்பதக்கத்தில் என் பெற்றோர்களுடைய சிறிய புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதையும் நான் உனக்கு அனுப்பியிருக்கிறேன். அதைக்கொண்டு நமது பிறவியின் சந்தேகத்தை யொழித்துக்கொள்ளலாம், என் பெற்றோர்களையும் அறிந்துகொள்ளலாம்.

கடைசியாக நான் உன்னைச் சந்தித்தபோது நீ என்னுடன் பிறந்தவளா யிருக்க வேண்டு மென்றே தீர்மானித்தேன். தற்செயலாக நாமிருவரும் ஒரே புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி நேரிட்டதும் எனக்கு அதிக வருத்தமாயிருந்தது. பாரத மாதா சங்கத்தைச் சேர்ந்தவள் என்பதை நான் வெளியிடமாட்டாமல் வாசுதேவரை விட்டு விலகும்படி நேரிட்டது. சங்கத்தின் உண்மையை வெளியிட்டிருந்தால் சந்தேகமின்றி அப்போதே என் உயிர் போயிருக்கும். ஆனல் அவரைப் பழி தீர்ப்பதற்காகவே உன்னை நான் அவரை விட்டுப் பிரித்து விட சூழ்ச்சி செய்தேன். வாசுதேவர் மாளிகையை விட்டு நீ வெளியேறிய பின், பின்னல் உனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை நினைத்து சகோதர வாஞ்சையால் தூண்டப்பட்டு உன்னைக் கொலை பாதகர்களிடமிருந்து தப்ப வைக்க என்ன செய்வதென்று நான் ஆலோசித்திருக்கையில்,பாரத சங்கத்தாரும் போலிஸ்காரர்களும, ஏககாலத்தில் என்னை வளைத்துக் கொண்டார்கள். வாசுதேவர் ரசசிய போலீஸ் அதிகாரி என்பதைப் பின்னல் நான் அறிந்து கொண்டிருக்கிறேனதலால், அவரிடம் போய்ச் சேரட்டும் என்று பாரத மாதா சங்கத்தின் ரகசியங்களை விளக்கக் கூடிய படத்தை என்னைத் தொடர்ந்து வந்த போலீஸ்காரன் முன்னிலையில் எறிந்துவிட்டு பதுங்கித் தப்பித்துககொண்டு, டெலிபோன்

மூலமாக வாசுதேவருக்கு உன்னுடைய ஆபத்தைப்பற்றி உடனே எச்சரித்துவிட்டேன்.

இத்தகைய சந்தர்ப்பங்கள் நேரிட்டபின் நான் உன்னை இனி பார்க்க நினைப்பது சரியன்று! நான் உயிருடனிருக்கின்றேனா, அல்லது இறந்து விட்டேனா, என்று கண்டுபிடிக்க முயற்சிப்பதும் வியக்தமாகும். என் கையிலிருந்த பணத்தை எல்லாம் அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு பாங்கியில் போட்டு உன் பேருக்கு ஒரு உண்டியல் வாங்கி யனுப்பி யிருக்கின்றேன். ஒரு சகோதரியின் சன்மானமாக அதைப் பெற்றுக்கொண்டு சுகஜீவியாக வாழும்படி மனப்பூர்வமாக ஆசி கூறுகின்றேன்.

உனதன்புள்ள சகோதரி
நீலலோசனி

அன்று வந்த மற்றோர் தபாலில் இரண்டு லட்சம் டாலர்களுக்கு சரோஜினி பேருக்கு ஒரு உண்டியலும், ஒரு தங்கப் பதக்கமும் வந்தன. (golden locket) அப்பதக்கம் ஒரு முழு டாலர் அளவிற்குக் கோழி முட்டை வடிவாக இருந்தது. மிக விநோதமான கொடி வேலைகள் அமைந்திருந்த அந்த லாக்கெட்டின் மேல் மூடியை சரோஜினி திறந்து பார்க்கையில், தன் பெற்றோர்களின் உருவப் படம் அதில் பொருத்தப் பட்டிருந்ததைப் பார்த்தாள். மனதிலடக்க முடியாத உள்ளக்கிளர்ச்சியுடன் சரோஜினி புகைப் பட மமைந்த லாக்கெட்டைத் தன் தாயாரிடம் காட்டினாள். இரத்தினவல்லி அதைப் பார்த்துக் கண்களில் நீர் ததும்ப —சரோஜினி! உன் உடன் பிறந்த சகோதரி குழந்தைப் பருவத்தில் என்னிட மிருந்து அபகரிக்கப்பட்ட காலத்தில் அவள் கழுத்திலன்றோ இப்பதக்க மிருந்தது—என்று ஆச்சர்யத்துடன் வினவினாள்.

சரோஜினி துக்கத்தினால் பதிலளிக்க முடியாமல் மௌனமாகக் கடிதத்தை எடுத்து இரத்தினவல்லியிடம் கொடுத்தாள்.

ஸர் வாசுதேவன் இந்த சமாச்சாரங்களைக் கேள்வியுற்று அதிசயித்தான். நீலலோசனி! சரோஜினி! இந்த இரு

இனிமையான பெயர்களையுமுடைய சகோதரிகளும் தன் மனைவிகளாக வாய்த்தது அவனுக்கு வியப்பா யிருந்தது.

நீலலோசனியின் ஞாபகார்த்தமாக அப்பதக்கத்தை வாங்கித் தன் கெடிகார சங்கிலியில் இணைத்துக் கொண்டான்.

நீலலோசனியின் பணத்தைக்கொண்டு பெண்களின் உயர்தரக் கல்வி யபிவிருத்திக்காக நீலலோசனி கலாசாலை என்ற பெயருடன்ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தப்பட்டது. ஸர் வாசுதேவனுடைய நன் முயற்சியாலும்,சரோஜினியின் ஊக்கத்தாலும் அக்கலாசாலை உலகப் பிரசித்தியடைந்தது.

முற்றிற்று.